விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பத்து

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2039 வைகாசி 25 சனிக்கிழமை (07.06.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 171

SATS TECH
யாழ்.நகரின் முன்னனி
Satellite & Cable TV நிறுவனம்
DIAL 021 222 5908

# மொறட்டுவப் பகுதியில் வைத்து
# பஸ்ஸின் மீது கிளைமோர்த் தாக்குதல்
# இருபது பேர் பலி; 75 பேர் படுகாயம்

## ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டுத் தேடுதல்

**(கொழும்பு)**

**கொழும்பின் புறநகர்ப் பகுதியான மொறட்டுவவில் பயணிகள் பஸ்ஸினை இலக்கு வைத்து நேற்றுக் காலை 7.35 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட கிளைமோர்த் தாக்குதலில் இருபது பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். 75 ற்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர். இச்சம்பவத்தையடுத்து அப்பகுதியில் பொலிஸ் ஊடரங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுத் தேடுதலும் மேற்கொள்ளப்பட்டது.** *(10 ஆம் பக்கம் பார்க்க)*



## மொறட்டுவத் தாக்குதலுக்கு ஜனாதிபதி கண்டனம்

(கொழும்பு)

மொறட்டுவ கட்டுப்பெத்தவில் நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வன்மையாகக் கண்டித்துள்ளார். இது தொடர்பாக ஜனாதிபதி வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது,

இத் தாக்குதலை நான் மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றேன். இத் தாக்குதலில் பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு காயமடைந்தவர்கள் கூடிய சீக்கிரம் சுகமடைய வேண்டும் என்றும் பிரார்த்திக்கின்றேன்.

சிங்கள மக்களை *(10 ஆம் பக்கம் பார்க்க)*

## மற்றொரு கிளைமோர் மீட்பு

(கொழும்பு)

மொறட்டுவப் பகுதியில் நேற்று இடம்பெற்ற கிளைமோர்த் தாக்குதலையடுத்து மேற்கொள்ளப்பட்ட தேடுதலில் 5 கிலோ எடையுள்ள மற்றொரு கிளைமோர்க் குண்டு மீட்கப்பட்டதாகப் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்தக் கிளைமோர்க் குண்டுடன் மைக்ரோ கைத்துப்பாக்கி மற்றும் ஏனைய போர் உபகரணங்களும் மீட்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ச-5)

## கண்டி பொல்கொல்லப் பகுதியில் நேற்று பஸ்ஸினுள் குண்டுவெடிப்பு

### இருவர் பலி; இருபது பேர் வரை படுகாயம்

(கண்டி)

கண்டி பொல்கொல்லப் பகுதியில் பயணிகள் பஸ்ஸில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் இருவர் பலியானதுடன் இருபது பேர் படுகாயமடைந்துள்ளனர்:

காயமடைந்தவர்கள் உடனடியாக கண்டி ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். இதில் சிலரின் நிலைமை கவலைக்கிடமாகவிருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

பொல்கொல்ல திறந்த பல்கலைக்கழகத்துக்கு முன்னால் நேற்று மாலை 4 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. வத்தேகமவிலிருந்து கண்டியை நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த எச்.ஜ்.-7501 இலக்கத்தைக் கொண்ட தனியார் பஸ்ஸிலேயே இந்தக் குண்டுவெடிப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் இடம்பெற்ற நேரம் பஸ்ஸில் 25க்கும் அதிகமான பயணிகள் பயணித்ததாகத் தெரிவிக்கப்பட *(10 ஆம் பக்கம் பார்க்க)*

## தமிழ் மாணவர்கள் மீது மொறட்டுவவில் தாக்குதல்

### தேடுதலில் முப்பது தமிழர்கள் கைது

(கொழும்பு)

மொறட்டுவ கட்டுப்பெத்தவில் நேற்றுக் காலை பஸ் மீது நடத்தப்பட்ட கிளைமோர்த் தாக்குதலையடுத்து மொறட்டுவப் பல்கலைக் கழகத்திற்குள் தமிழ் மாணவர்கள் சிலர் தாக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் இடம்பெற்ற நேரத்தில் பல்கலைக் கழகத்திற்குள் இருந்த தமிழ் மாணவர்கள் சிங்கள மாணவர்களால் கடுமையான தாக்குதலுக்கு இலக்காகியுள்ளனர்.

10ற்கும் அதிகமான தமிழ் மாணவர்களைச் சிங்கள மாண *(10 ஆம் பக்கம் பார்க்க)*

## யாழ்.குடாவுக்கு மேலாக பறந்த கிபீர் விமானம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டிற்கு மேலாக நேற்றிரவு 11 மணியளவில் கிபீர் விமானம் வட்டமிட்டுள்ளது. சுமார் 15 நிமிட நேரமளவு யாழ்.குடாவை வட்டமிட்ட கிபீரினால் கரையோரப் பகுதி மக்களிடையே பதற்ற நிலை காணப்பட்டது.

இதேவேளை கிபீர் விமானம் பூநகரிப் பகுதியில் தாக்குதல் நடத்தியதாகக் கூறப்பட்ட போதும் அதனை உறுதிப்படுத்த முடியவில்லை. (எ-5)

## யாழ்ப்பாண நீதிபதியாக அரியநாயகம் நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட நீதிபதியாகவும் நீதிவானாகவும் பருத்தித்துறை மாவட்ட நீதிவான் கே.அரியநாயகம் நீதிச் சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்டுள்ளார்.


மேல் நீதிமன்ற நீதிபதியாக பதவியுயர்வு பெற்றுச் சென்றுள்ள இ.த.விக்னராஜாவின் இடத்துக்கே இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

1978 ஆம் ஆண்டு சட்டத்தரணியாக நீதித்துறைக்குள் பிரவேசித்த இவர் 2003 ஆம் ஆண்டு நீதிச். சேவைக்குள் இணைந்தார்.

நீதிபதி கே.அரியநாயகம் சாவகச்சேரி மற்றும் பருத்தித்துறை நீதிமன்றங்களின் நீதிவானாகக் கடமையாற்றியுள்ளார். இதேவேளை யாழ்.மேலதிக நீதிவானாக எஸ். வசந்தசேனன் கடமையாற்றுவார் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-5)

## அர்ப்பணிப்பான பேச்சுவார்த்தையே பிரச்சினைக்கு தீர்வை பெற்றுத் தரும்

### பாப்பரசர் வலியுறுத்தல்



(வத்திக்கான்)

அர்ப்பணிப்புடனான பேச்சுவார்த்தையே இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வை ஏற்படுத்தும் எனப் பரிசுத்த பாப்பரசர் 16-வது ஆசீர்வாதப்பர் தெரிவித்துள்ளார்.

வத்திக்கானுக்காக நியமிக்கப்பட்டுள்ள புதிய இலங்கைத் தூதுவரான பண்டார மதுவேகொதரவின் நியமனக் கடிதத்தை ஏற்றுக் கொண்டதன் பின்னர் பாப்பரசர் இந்தக் கருத்தை *(10 ஆம் பக்கம் பார்க்க)*

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

# அஞ்சல் அதிபர்களாக இணைத்துக் கொள்ள நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டோர்

(யாழ்ப்பாணம்)

அஞ்சல் அதிபர்களாக இணைத்துக் கொள்வதற்கான நேர்முகத் தேர்வுக்கு மேலும் 6 பேர் அழைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான கடிதங்கள் இன்று தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக வட வலய பிரதி அஞ்சல் மா அதிபர் வி.குமரகுரு தெரிவித்தார். ஏற்கனவே 35 பேருக்கான அனுமதிக் கடிதங்கள் அனுப்பி வைக்கப் பட்டுள்ளதாகவும் கூறினார்.

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்ட 41 பேரினதும் பெயர் விபரங்கள் வருமாறு,

எஸ்.கிருஷ்குமாரன் (கொக்குவில் மேற்கு), ரி.சுஜிதா (இணுவில் கிழக்கு), எஸ்.சிவசுப்பிர மணியசர்மா(புதுக்கோவில், கொக்குவில்), ஜி.தங்கமலர்ச்செல்வி ( நல்லூர் வடக்கு), பி.ரஜித்தா (கணேஸ்வரம் அளவெட்டி), எஸ். மகேஸ்வரி (கலைப்புலவர் வீதி), எம்.உஷா நந்தினி (வட்டுக்கோட்டை),

கே.கிருஷ்ணவாணி (ஆனைக்கோட்டை), எஸ்.சர்மிளா (அளவெட்டி வடக்கு), எஸ்.கார்த் திகா (சுதுமலை தெற்கு), எஸ்.இரணுசன் ஜந்தியா (கொடிகாமம்), ஏ.அமிர்தவர்ஷினி (அரியாலை),

பி.நிஷாந்தன் (புத்தூர் கிழக்கு), ரி.சிவரூபி (கோப்பாய் வடக்கு), ஆர்.கார்த்திகா (திரு நெல்வேலி தெற்கு), எம்.சுகந்தினி (அச்சு வேலி தெற்கு), ரி.சுஜிவன் (நல்லூர் கிழக்கு), எஸ்.ஜோ.ஸ்ராலின் (மாட்டீன் வீதி),

ஜி.கிருஷ்ணராஜா (அளவெட்டி மத்தி), தி.துஷ்யந்தன் (கந்தர்மடம்), ஏ.அகிலன் (கோப்பாய் தெற்கு), எஸ்.வானதி (ஏழாலை மேற்கு), ரி.பசுபதி (அளவெட்டி கிழக்கு), என். சிவசங்கரி (புலோலி மத்தி), ஏ.சுஜித்தா (கர வெட்டி), என்.சுஜிந்தன் (சாவகச்சேரி),

ரி.யுவதீஸ்வரா (நல்லூர்), ஏ.கனீஸ்ரோர் (நல்லூர்), ஜி.நிஷாந்தன் (கொழும்புத்துறை), எம்.பிரியந்தி (திருநெல்வேலி கிழக்கு), எஸ்.மாலினி (வேலணை), ரி.மோகனகுமார் (ஆனைக்கோட்டை), ஏ.சுபைஜசீலன்(புத்தூர் கிழக்கு), எஸ்.நிவேதிதா(தாவடி), கே.குகாஜினி (அல்வாய் கிழக்கு),

**பின்னர் அழைக்கப்பட்டோர்**

எஸ்.கலைவிநோதன் (சரசாலை வடக்கு), ஜே.டன்ஷி (மானிப்பாய்), ஏ.சோபிராஜ் (குருநகர்), தி.கஜேந்திரன் (தாவடி கிழக்கு) , கே.லதிக்கா (அரியாலை), எஸ்.சுகிர்தா (தெல்லிப்பழை). (ச-5)

# முன்னாள் மேலதிக அரச அதிபரின் மறைவுக்கு யாழ்ப்பாண அரசாங்க அதிபர் இரங்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட முன்னாள் மேலதிக அர சாங்க அதிபர் து.வைத்திலிங்கத்தின் மறை வுக்கு யாழ். அரச அதிபர் க.கணேஷ் இரங் கல் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தி வருமாறு,

28.05.2008ஆம் திகதி அமரத்துவம டைந்த துரையப்பா வைத்திலிங்கம் அவர்க ளுக்கு எமது இதய அஞ்சலிகள். பழகுவதற்கு இனிய மனிதர்களுள் து.வைத்திலிங்கம் குறிப்பிடத்தக்கவர்.

எழுதுவினைஞராக அரசாங்க சேவை யில் இணைந்து கொண்டு இலங்கை நிர் வாக சேவைக்கான பத்வியுயர்வைத் தனது பணியினாலும் படிப்பினாலும் பெற்றுக் கொண்டவர்.

திருகோணமலை, பூநகரி உட்பட நாட்டின் பல பாகங்களிலும் பணிபுரிந்தாலும் யாழ். மாவட்டத்திற்கு ஆற்றிய பணி மறக்கவோ மறைக்கவோ இயலாதது எனலாம்.

சண்டிலிப்பாய், சங்கானை உதவி அர சாங்க அதிபர் பணிமனைகளில் உதவி அரசாங்க அதிபராகவும் விசேட ஆணையா ளராகவும் பணியாற்றி பிரதேச மக்களினதும் பணிமனை ஊழியரதும் அன்புக்கும் அபிமா னத்துக்கும் உரியவராக ஒரு குடும்பத்தின் தலைவன் போல் இன்ப துன்பங்களில் பங்கு கொண்டு பங்களிப்பு முகாமைத்துவப்பாணி யில் பணியாற்றியவர். பிரதேச மக்களின் வாழ்க்கைத்தர உயர்வுக்காக பாடுபட்டவர்.

இடுக்கண் மிகுந்த காலப்பகுதியில் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் உதவி அரசாங்க அதிபர் (தலைமைப்பீடம்), மேலதிக அரசாங்க அதிபர் ஆகிய பொறுப்புக்களை ஏற்றுச் செவ்வனே நிறைவேற்றியவர்.

யாழ்.மாவட்டத்தின் கிராம அலுவலர்களு டன் நட்புரிமையுடன் பழகி, அவர்கள் பிரச்சி னைகளை அடையாளம் கண்டு தீர்க்க வழி காட்டியவர். அன்பொன்ற ஆயுதத்தால் அனை வரையும் நல்வழிப்படுத்தவல்ல ஆசான் அவர்.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை யின் அறிவுறுத்தலுக்கு இணங்க மாவட்ட சிறு வர் கண்காணிப்புக்குழுவை யாழ்.மாவட்டத் தில் செயற்படுத்தியதோடு சிறுவர் பாதுகாப்பு குழுவையும் (DCPC) உருவாக்கி அதன் செயற்பாட்டுக்கு ஒத்துழைப்பு நல்கியவர்.

இன்று அதனை இணைத்து யாழ். மாவட்ட சிறுவர் அபிவிருத்திக் குழுவாக செயற்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

இலக்கியவாதியான அமரர் து.வைத்தி லிங்கம் அமரத்துவம் அடைந்தாலும் அவ ரது இலக்கிய படைப்புக்களினூடாகவும் ஆற் றிய பணிகளின் பயன்நிறைந்த தன்மையா லும் மக்களின் மனங்களில் தொடர்ந்தும் வாழ்வார் என்பதில் ஐயமில்லை. (ச)

## ஆசிரியர் சேவைக்குள் உள்ளீர்க்கப்பட்டவர்களுக்கு

நிகழ்ச்சித்திட்ட உதவியாளர், திட்டமிடல் நிதி உதவியாளர், அபிவிருத்தி உதவியாளர் களாக கடமையாற்றி ஆசிரிய சேவைக்கு உள்ளீர்க்கப்பட்டு, யாழ்.வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் கடமையாற்றிக் கொண்டி ருக்கும் ஆசிரியர்களை (இடம்பெயர்ந்து தற் காலிக இணைப்பிலுள்ள ஆசிரியர்கள் உட் பட) இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். வலயக் கல்வி அலுவலகத்திற்கு தவ றாது சமுகம் தருமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித் துள்ளார். (ச)

# தரம் குறைந்த பொருட்கள் குறித்து உடனடியாக அறிவிக்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் கூட்டுறவுச் சங்கக் கிளைகளின் மூலம் விநியோகிக்கப்பட்டு வரு கின்ற நிவாரணப் பொருட்களின் தரம் பேணப் படவேண்டியதன் முக்கியத்துவம் குறித்து சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வலியுறுத்தி யுள்ளார்.

இதன் பிரகாரம் தரங்குறைந்த பொருட்க ளைக் கூட்டுறவுச் சங்கங்கள் விநியோகிப் பதற்கு முன்வரக் கூடாதென்றும் அவ்வா றான பொருட்களை மக்கள் வாங்கக் கூடா தென்றும் கண்டிப்பாகத் தெரிவித்துள்ளார்.


தரங்குறைந்த பொருட்கள் எந்தவொரு கூட்டுறவுச் சங்கக் கிளைகளின் ஊடாகவும் வழங்கப்பட்டால் 222 9824 என்ற தொலை பேசி இலக்கத்துக்கு உடனடியாகத் தனது கவ னத்துக்கு கொண்டுவரும்படி அமைச்சர் கேட் டுள்ளார். (எ)

## புற்றுநோய் சிகிச்சை நிலைய மூன்றாம் ஆண்டு நிறைவு விழா

தெல்லிப்பழை புற்றுநோய் சிகிச்சை நிலை யத்தின் மூன்றாவது ஆண்டு நிறைவு விழா நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 11.30 மணிக்கு தெல்லிப்பழை புற்றுநோய் சிகிச் சை நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் கலந்து கொள்கிறார். சிறப்பு விருந்தினராக பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் (நிர்வாகம்) பொ.தயானந்தன் கலந்து கொள் கிறார்.

இந்நிகழ்வில் 'யாழ்.மாவட்டத்தில் புற்று நோய் சிகிச்சை சேவைகள்' எனும் தலைப் பில் புற்றுநோய் சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி ந.ஜெயகுமாரன் அவர்கள் உரை நிகழ்த்தவுள்ளார். (ச)



யாழ்.பல்கலைக்கழக தொல்லியல் ஆய்வு வட்டத்தின் தேடல்-1 நூல் வெளியீட்டு விழாவில் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முக லிங்கன் நூலை வெளியிட்டு வைக்க அதன் முதற் பிரதியை கே.கே. அருள்வேல் பெற்றுக் கொள்வதையும், நிகழ்வில் கலந்து கொண் டோரையும் படங்களில் காணலாம். (படங்கள்: அபி, கவி)

# எழுத்து, நேர்முகப் பரீட்சையின் அடிப்படையில் அதிபர் நியமனம்

## கல்வி அமைச்சின் உயர் அதிகாரி தகவல்

(கொழும்பு)

எதிர்காலத்தில் அதிபர் பதவிக்கான நியம னங்கள் எழுத்து, நேர்முகப் பரீட்சையின் அடிப்படையில் வழங்கப்படுமென கல்வி அமைச்சின் உயர் அதிகாரியொருவர் தெரி வித்தார்.

இது தொடர்பாக அவர் குறிப்பிட்டதாவது,

அதிபர் நியமனங்கள் சேவைக்கால மூப்பு மற்றும் போட்டிப் பரீட்சை அடிப்படைகளில் வழங்கப்பட்டு வந்துள்ளன.

இதனால் பல முரண்பாடுகள் கல்வித் துறையில் இடம்பெற்றுள்ளன. இவற்றைக் கருத்தில் கொண்டு எழுத்துப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை என்பவற்றில் பெறப்படும் புள்ளிகளின் அடிப்படையில் அதிபர் நியம னங்களை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் பாடசாலைகளில் காணப் படும் அதிபர் வெற்றிடங்களை நிரப்புவதற் காக பரீட்சைத் திணைக்களத்தினால் எழுத் துப் பரீட்சை நடத்தப்பட்டது.

அத்தோடு சகல மாகாணங்களிலும் பரீட் சைகளில் சித்தியடைந்தவர்களுக்கான நேர் முகப் பரீட்சைகளும் நடைபெற்றுள்ளன.

இதுவரை இரண்டு மாகாணங்களிலிருந்து நேர்முகப் பரீட்சை முடிவுகள் கல்வி அமைச் சுக்கு கிடைக்கப் பெற்றுள்ளன. ஏனைய மாகா ணங்களிலிருந்து நேர்முகப் பரீட்சைக்கான முடிவுகள் கிடைக்கப் பெறவில்லை.

நேர்முகப் பரீட்சை முடிவுகள் கிடைக்கப் பெற்றதும் நியமனங்களை வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். (ச-5)

## வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

குடும்பநல உத்தியோகத்தருக்கான வினைத்திறமைகாண் தடைப்பரீட்சைக்கான வெளிக்களப் பரீட்சை எதிர்வரும் 10ஆம் திகதி கோண்டாவில் பிரதேச வைத்திய சாலையிலும் 11ஆம் திகதி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையிலும் நடைபெறும். சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர் களை குறிப்பிட்ட இடங்களுக்கு தவறாது சமுகமளிக்குமாறு யாழ்.சுகாதாரசேவைகள் பிராந்தியப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (ச)


## பூப்புனித நீராட்டு விழா

அன்புடையீர்,

நிகழும் சர்வ மங்களகரமான சர்வதாரி வருடம் வைகாசித் திங்கள் 26ஆம் நாள் (08.06.2008) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.52-11.52 வரையுள்ள சிங்க லக்கின மும் ஆயிலிய நட்சத்திரமும் பஞ்சமித் திதியும் சித்த யோகமும் கூடிய சுப முகூர்த்த சுப வேளையில் எமது புத்திரிகள் திருவளர் செல்விகள்

**ஆரணி** ஆகிய இருவருக்கும் **வேழினி**

வேலணை பெருங்குளம் ஸ்ரீமுத்துமாரி அம்பாள் துணைகொண்டு எமது இல்லத்தில் பூப்புனித நீராட்டு விழா செய்ய பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத் தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து புதல்விகளை ஆசீர்வதித்து அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன விருந்துபசாரத்திலும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*குறிப்பு:-சுற்றத்தார், உறவினர், நண்பர்களினது சரியான விலாசங்கள் தெரியாத காரணத்தால் இந்த அறிவித்தல்களை ஏற்றுக் கொள்ளுமாறு ஒவ்வொருவரையும் கேட்டுக் கொள்கின்றோம்.*

**இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்**

இல.23, சிவன்பண்ணை வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம்,
தொலைபேசி: 021-222-7775

திரு-திருமதி Dr. இ.சற்குருநாதன்
(அப்பு) (விசகடி வைத்தியர்)
மங்கையற்கரசி (ராசாத்தி) தம்பதிகள்
திருமதி அனுசம்மா இளையதம்பி
(அப்பம்மா) (விசகடி வைத்தியர்)

(C-1191)

## மணமக்கள் தேவை

லண்டன் 1971இல் பிறந்த R.C. வேளாளர் மணமகனுக்கு மணமகளும், கனடா 1976. சுவாதி, 1இல் செவ்வாய், கிரகபாவம் 47. வேளாளர் மணமகளுக்கு மணமகனும் தேவை. மேலும் எம்மிடம் வெளிநாட்டில் வசிக்கும் PR உடைய மணமகன்கள், R.C., இந்து, உள்நாட்டு மணமக்களும் உள்ளனர்.

தொடர்புக்கு:- மேரி திருமண சேவை
46, புதுவீதி, கொய்யாத்தோட்டம்
T.P:- 0779116346

(1126)

# இன்று ஒரு தகவல்

## வறுமையின் விலை

ஒரு ஊரில் இமாம் என்ற துணிவியாபாரி இருந்தார். வெளியூர்களிலிருந்து வரும் துணிவகைகளை கடையில் வைத்து விற்பதுதான் அவருடைய தொழில்.

ஒருநாள் அவருடைய கடைக்கு ஒரு வயதான அம்மா பழைய பட்டுச்சேலை ஒன்றை எடுத்துக்கொண்டு வந்தார். அதை இமாமிடம் காட்டி, "ஐயா இந்தப் பழைய சேலையை உங்களால் விலைக்கு வாங்கிக்கொள்ள முடியுமா?'' என்று கேட்டார்.

அந்தக் கடையில் வேலைசெய்யும் ஊழியர் இதை வேடிக்கையாகப் பார்த்தார். ''இந்த அம்மா விபரம் தெரியாமல் இப்படி வந்து கேட்கிறாரே! இதை யாராவது வாங்குவார்களா?'' என்று நினைத்தார்.

சரி... இமாம் என்ன சொல்கிறார் பார்க்கலாம்... என்று அவரையே கவனித்துக்கொண்டு இருந்தார். இமாம் அந்த மூதாட்டியை ஏற இறங்கப் பார்த்தார். பின், ''அம்மா... இதற்கு எவ்வளவு தொகை வேண்டும்?'' என்று கேட்டார். ''இதற்கு நூற்றி இருபது திர்கம் வேண்டும்!'' என்றார் அந்த அம்மா.

இதைக்கேட்ட இமாம் இலேசாக சிரித்துக்கொண்டே ஊழியரைப் பார்த்தார். "இந்த அம்மாவுக்கு 400 திர்ஹம் கொடுத்தனுப்பு!'' என்றார். அந்தப் பணியாளருக்கு ஆச்சரியமாக இருந்தது. அந்த அம்மா 120 திர்ஹம் கேட்க, இவர் 400 திர்ஹம் கொடுத்தனுப்பு என்கிறார். ஒன்றுமே புரியவில்லையே... என்று யோசித்துக்கொண்டு மறுபடியும் இமாமைப்பார்த்து மெதுவாக ''ஏன் இதற்கு இவ்வளவு விலை கொடுக்கவேண்டும்?'' என்று கேட்டார்.

அதற்கு இமாம் ''பேசாமல் நான் சொன்னபடி செய்! நீ அந்தத் துணியைப் பார்க்கிறாய்! நான் அந்த ஏழையின் வறுமையைப் பார்க்கிறேன்!'' என்றார். அதற்குப் பிறகு அந்த ஊழியர் எதுவும் பேசவில்லை. பணத்தைக் கொண்டுவந்து அந்த அம்மாவிடம் கொடுத்தார். அந்த அம்மாவின் மனம் நிறைந்தது. வறுமைக்கு விலை ஏது?, அது எல்லோருக்கும் புரியாது! பெரியவர்களுக்குத் தான் புரியும்! அது புரிந்ததால் தான் அந்தப் பெரியவர் அப்படி நடந்துகொண்டார்.

நற்பண்புகள் யாவை? என்று நபிகள் நாயகத்திடம் கேட்டனர். அதற்கு அவர் சொன்ன பதில் என்ன தெரியுமா?

ஒற்றுமையாக இருப்பது, நல்ல காரியங்களைச் செய்வது, தர்மம் செய்வது, சலாம் சொல்ல முந்திக் கொள்வது. நோயாளியைச் சென்றுபார்ப்பது, நல்லவரா கெட்டவரா என்று பாரால் பிரதே ஊர்வலத்தில் கலந்துகொள்வது, முதியவர்களுக்கு மரியாதை செய்வது, அயலவர்களுடன் அன்பாக நடந்துகொள்வது, மன்னிப்பது, சண்டை சச்சரவுகளைத் தீர்த்துவைப்பது, கோபத்தை அடக்குவது, விலக்கப்பட்டதைத் தவிர்ப்பது, உறவினர்களிடம் அன்பாக நடந்து கொள்வது, கர்வம் கொள்ளாமல் இருப்பது-இவற்றைத்தான் நபிகள் நாயகம் நற்பண்புகளாக கூறினார். ஒன்றுதான் இப்படிப்பட்ட நற்பண்புகளில் இமாம் மூதாட்டிக்குச் செய்த உதவி.

நமக்கு வேண்டப்பட்டவர்களில் இப்படிப்பட்ட பண்பாளர்களைப் பார்ப்பது கஷ்டமான காரியம்! எனக்கு வேண்டப்பட்ட ஒரு கடைக்காரர் இருந்தார். அவர் கடையில் இல்லாத நேரம் பார்த்து கடைக்கு ஒரு ஆள் வந்தான். அவன் வேலைக்கார பையனைப் பார்த்து... "ஒரு கோழி இருக்கிறது வாங்கிக்கொள்கிறீர்களா? விலை பத்து ரூபா தான்'' என்றான். இவனும் இலாபம் என்று நினைத்து கோழியைக் கேட்டான். அதற்கு அவன், கோழியின் படம் ஒன்றை எடுத்துகொடுத்தான். இவனும் அதை வாங்கிப் பார்த்துவிட்டு, ஒரு பேப்பரில் பத்து ரூபா என்று எழுதிக் கொடுத்தான்.

கொஞ்ச நேரம் கழித்து, முதலாளிவந்த தும் நடந்த விஷயத்தைச் சொன்னான். இதைக் கேட்டதும், "பளார்'' என்று ஒரு அறைவிட்டார் முதலாளி.

அவனுக்கோ ஒன்றும் விளங்க வில்லை. ''நான் என்ன தப்பு பண்ணினேன் முதலாளி?'' என்றான். "பத்து ரூபா என்று ஏன் பேப்பரில் எழுதிக்கொடுத்தாய்? அந்த பேப்பர் வேஸ்ட் தானே! அதை வாயாலேயே சொல்லியிருக்கலாமே!'' என்றார் முதலாளி.

தென்கச்சி கோ சுவாமிநாதன்

## கட்டுரை, கவிதைப் போட்டி

இலங்கை சட்டக்கல்லூரி சட்ட மாணவர் தமிழ் மன்றத்தினால் நடத்தப்படவிருக்கும் 2008ஆம் ஆண்டிற்கான அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான கட்டுரை மற்றும் கவிதைப் போட்டிக் கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தலைப்புக்கள் போட்டியின்போதே வழங்கப்படுவதுடன் அவை தமிழ் மொழி மற்றும் சமூகம் தொடர்பானவையாகக் காணப்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி போட்டிக்கு விண்ணப்பிப்போர் அதிபரின் கையொப்பத்துடன் எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னதாக கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் எஸ்.எஸ்.தர்ஷன் போட்டி ஏற்பாட்டாளர் ,111/23 யூனியன் பிளேஸ், கொழும்பு-02 என்ற முகவரிக்கு அனுப்பிவைக் கும்படி தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலதிக தகவல்களைப் பெற விரும்புவோர் 0779679597 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம்.(அ-5)

## சுகாதார முகாமை உதவியாளர் போட்டிப் பரீட்சை

வடமராட்சியில், சுகாதார முகாமைத் துவ உதவியாளர் சேவைக்கு உள்ளீர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை வட இந்து மகளிர் கல்லூரி மற்றும் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறவுள்ளதாக வலயக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஓ)

## லண்டன் சதக் மாநகரசபை மேயராக பாக்கியதேவி தெரிவு

இலய்யா பாக்கியதேவி என்பவர் லண்டன் சதக் மாநகரசபையின் மேயராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவர் இலங்கை அரசாங்கம் முன்னெடுக்கும் மனிதாபிமான இராணுவ நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து வருவதாக தினமின நாளேடு செய்தி வெளியிட்டுள்ளது.

2002ஆம் ஆண்டு இலங்கை வந்திருந்த பாக்கியதேவி தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு நிதி மற்றும் உபகரண உதவிகளை வழங்கியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. (அ-5)

## இராசிபலன்

07.06.2008
(வைகாசி 25, சனிக்கிழமை)
பூசம் பின்னிரவு 03.01 மணிவரை
சதுர்த்தி பிற்பகல் 05.12 மணிவரை
இராகுகாலம் 08.52-10.22 மணிவரை
சுபநேரம்-02.52-04.22 மணிவரை
சதுர்த்தி விரதம்
நமிநந்தியடிகள் குருபூசை

| | |
|---|---|
| மேடம் | ரோகநிலை, சுப செய்தி, முயற்சி தாமதம், மனப்பயம். |
| இடபம் | காரிய அனுகூலம், போசனசுகம், பிரயாண நன்மை, தனவருவாய். |
| மிதுனம் | உணர்ச்சிவசப்படல், அதிக செலவு, குடும்பக்கவலை. |
| கடகம் | பெரியோர் சந்திப்பு, போசன சுகம், புதிய முயற்சி, கல்வியில் ஆர்வம். |
| சிங்கம் | மனஸ்தாபம், சுபசெலவு, சயன சுகக் குறைவு, பிரயாணம். |
| கன்னி | எடுத்தகாரியம், கைகூடும், தன வருவாய், கீர்த்தி, விருந்துபசாரம். |
| துலாம் | தொழில் மேன்மை, காரியசித்தி, நண்பர்கள் உதவி, ஆரோக்கியம். |
| விருச்சிகம் | புதிய திட்டமிடல், எதிர்பாராத செலவு, முயற்சி தாமதம். |
| தனுசு | பயந்தசூழல், ஆரோக்கியக் குறைவு, காரிய தடங்கல், போசனசுகம். |
| மகரம் | சென்ற இடத்தில் செல்வாக்கு, முயற்சி பலிதம், பொருள் சேர்க்கை. |
| கும்பம் | சத்துரு ஜெயம், மனமகிழ்ச்சி, காரிய அனுகூலம், உடல்நலம். |
| மீனம் | கௌரவக்குறைவு, வியாபார விருத்தி, வேலைச்சுமை, குடும்பக்கவலை. |

வளவன்

# விண்ணப்பம் கோரல்

## வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சை

கல்வியமைச்சின் அபிவிருத்தி உதவியாளர்கள் திட்டமிடல்/ நிதி உதவியாளர்களுக்கானகளுக்கான முதலாவது வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சை-2007(2008) இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் இவ்வருடம் செப்டெம்பர் மாதம் நடாத்தப்படவுள்ளது.

விண்ணப்பப்படிவங்கள் விண்ணப்பதாரியின் சொந்தக் கையெழுத்தில் பூரணப்படுத்தி இம்மாதம் 30ஆம் திகதியன்றோ அதற்கு முன்பாகவோ கிடைக்கக்கூடியதாக, பரீட்சை ஆணையாளர், பரீட்சைத்திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்ல என்ற முகவரிக்கு அனுப்பப்படல்வேண்டும்.

## தரமுயர்த்துவதற்கான பரீட்சை

அரச முகாமை உதவியாளர் சேவையில் வகுப்பு III ஐச் சேர்ந்த அலுவர்களை அச்சேவையில் வகுப்பு II இற்கு தரமுயர்த்து வதற்கான தகவுத்திறன் பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும் மொழிகளிலும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் இவ்வருடம் செப்டெம்பர் மாதம் நடாத்தப்பட வுள்ளது.

இப்பரீட்சைக்கு சேவையில் வகுப்பு III ஐச்சேர்ந்தவர்களும் 2008 யூலை மாதம் 7ஆம் திகதிக்கு முன்னர் நியமனங்களில் உறுதிப்படுத் தப்பட்டவர்களும் 4 வருட முனைப் பான அத்துடன் திருப்திகரமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்துள்ள அலுவலர்கள் விண்ணப் பிக்கலாம்.

விண்ணப்பங்கள் 2008 யூலை 7ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கக் கூடியதாக பரீட்சை ஆணையாளர் நாயகம் ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைக்கிளை, இலங்கை பரீட்சைத் திணைக்களம், பெலவத்த, பத்தர முல்ல என்ற விலாசத்திற்கு அனுப்பவும்.

மேலதிகதகவல்களை 6/6/2008 ஆம் திகதிய வர்த்தமாணியிலோ அன்றிவலம்புரிக்காரியாலயத்திலோ பார்வையிடலாம்.

## ஆசிரிய ஆலோசகர், கணனிப் போதனாசிரியர்

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலயத்தில் வெற்றிடமாகவுள்ள தகவல் தொழில்நுட்ப சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் , வலய கணனி வளநிலைய முகாமையாளர் மற்றும் கணனி போதனாசிரியர் ஆகிய பதவிகளுக்கு பொருத்தமானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்கள் இப்பதவிகளுக்கு விண்ணப்பிக்கமுடியும்.

சாவகச்சேரியில் உள்ள வலயக் கல்வி அலுவலகத்தில் உரிய விண்ணப்பப்படிவத்திணைப் பெற்று எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னர் பூர்த்திசெய்த விண்ணப்பங்களை வலயக் கல்விப் பணிமனையில் சமர்ப்பிக்குமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (அ-5)

## தொழில்நுட்பக் கல்லூரிகளில் நடத்தப்படும் பாடநெறிக்கான விண்ணப்பத் திகதி நீடிப்பு

(கொழும்பு)

2008/2009 ஆம் கல்வி யாண்டில் தொழில் நுட்பக்கல்லூரிகளில் நடத்தப்படும் பாடநெறிகளுக்கு விண்ணப்பிப்பதற்கான விண்ணப்பமுடிவுத்திகதி நீடிக்கப்பட்டுள்ளது.

இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரிகளில் நடத்தப்படும் பாடநெறிகளுக்கு மாணவர்களைச் சேர்த்துக் கொள் வதற்கான விண்ணப்பங்கள் தகைமையுடைய விண்ணப்பதாரி களிடமிருந்து கடந்த ஏப்ரல் மாதம் 11ஆம் திகதி வெளியான அரசாங்க வர்த்தமானி அறிவித்தல் மூலம் கோரப்பட்டிருந்தன.

அவ் வறிவித்தலில் குறிப்பிட்டிருந்த விண்ணப்பங்களை அனுப்பி வைப்பதற்கான விண்ணப்பமுடிவுத்திகதியானது இம் மாதம் 15 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக தொழில்நுட்பக்கல்வி மற்றும் பயிற்சி திணைக்கள பணிப்பாளர் கலாநிதி எச். எல். ஒபே சேகரா அறிவித்துள்ளார்.

பல்வேறு அனுகூலங்களைக் கொண்ட இப்பாட நெறிகளுக்கு விண்ணப்பிக்கவுள்ள மாணவர்கள் தாங்கள் பாடநெறியைத் தொடர எதிர்பார்க்கும் தொழில் நுட்பக் கல்லூரி அதிபருக்கு இம் மாதம் 15ம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை பதிவுத் தபாலில் அனுப்பி வைக்க வேண்டும்மென பணிப்பாளர் கேட்டுள்ளார். (அ-5)

## சட்டக்கல்லூரி நுழைவுப்பரீட்சை விண்ணப்பத் திகதி நீடிப்பு

2009 ஆம் கல்வி யாண்டில் இலங்கைச் சட்டக் கல்லூரியின் நுழைவுப்பரீட்சைக்கான விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்ளும் இறுதித் திகதியும் நீடிக்கப்பட்டுள்ளது.

இம் மாதம் 16 ஆம் திகதி திங்கட் கிழமை வரை விண்ணப்பங்களை கல்லூரியில் பெற்றுக் கொள்ளமுடியும் எனவும் இத்திகதியானது மேலும் நீடிக்கப்படமாட்டாது எனவும் சட்டக் கல்லூரியின் அதிபர் அறிவித்துள்ளார். (அ-5)

## தொழில் தகைமைப் பயிற்சிநெறி

ஆசிய அபிவிருத்தி வங்கியின் கல்வியறிவுச் சமுதாய விருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், தொழில் தகைமைப் பயிற்சிநெறிக்கு 100 புலமைப்பரிசில்களைகல்வி அமைச்சு வழங்கவுள்ளது.

ஆங்கிலத்தில் தொழில் தகைமைத்திறன் விருத்தியை நோக்காகக் கொண்டு 3 மாத வதிவிடப் பயிற்சிநெறியாக ஆங்கிலத்தில் சான்றிதழ் பயிற்சி நெறியைத் தொடர்வதற்கு கல்வித்துறை சார்ந்தோருக்கு இப்புலமைப் பரிசில் வழங்கப்படவுள்ளது.

இப் புமைப் பரிசிலைப் பெறுவதற்கு கல்வித்துறையில் ஆங்கில மொழி மூலமான மற்றும் அதனுடன் தொடர்புடைய கடமைகளை மேற்கொள்ளும் உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், மாகாண இணைப்பாளர்கள், வலய இணைப்பாளர்கள், பாடசாலைகளில் ஆங்கிலப் பிரிவுக்குப் பொறுப்பான தலைவர்கள், ஆசிரிய கல்வியாளர்கள், அதிபர்கள், பிரதி அதிபர்கள், உதவி அதிபர்கள் மற்றும் கல்வி அமைச்சின் உத்தியோகத்தர்கள் விண்ணப்பிக்க முடியுமென கல்வி அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார்.

இப்பயிற்சி நெறியானது பேராதனை தேசிய கல்விக் கல்லூரியின் ஆங்கிலக் கற்கை நிலையத்தில் நடைபெறவுள்ளதாகவும், விண்ணப்பங்களை பதிவாளர், தேசிய கல்விக் கல்லூரி, பேராதனை என்ற முகவரிக்கு இம்மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னதாக பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கப்படல் வேண்டுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# சைவசமய அறிவுப் போட்டி முடிவுகள்

(சாவகச்சேரி)

சரசாலை இந்து மன்றம் நடாத்திய சைவ சமய அறிவு நாவன்மைப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் பெயர் விபரம் வருமாறு,

**பாலர்பிரிவு** :வி.அபர்ணவி - சரசாலை மத்தி. மயூரி முன்பள்ளி, செ.தர்ஷனி - சரசாலை மத்தி மயூரி முன்பள்ளி, த.பௌஞ்சிகா - சரசாலை மத்தி மயூரி முன்பள்ளி.

**ஆரம்பப் பிரிவு** : வி.கபிலன் - சரசாலை ஸ்ரீகணேச வித்தி யாலயம், த.வராகன் - சரசாலை ஸ்ரீகணேச வித்தியாலயம், கு.பிரிய தர்ஷன்- சாவகச்சேரி இந்துஆரம்பப் பாடசாலை.

**கீழ்ப்பிரிவு:** கு.தக்ஷா - சரசாலை ஸ்ரீகணேச வித்தியாலயம், தெ.கிரிசன் - சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை, த.தயாபரி - சரசாலை ஸ்ரீகணேச வித்தியாலயம்

**மத்தியபிரிவு:** யோ.மேனகா சாவகச்சேரி இந்துக் கல்லூரி, க.கீர்த்திகா - சாவகச்சேரி இந்துக் கல்லூரி, வி. யனுஜன் - சரசாலை ஸ்ரீகணேச வித்தியாலயம்

**மேற்பிரிவு:** யோ. மயூரதி -சாவகச்சேரி இந்துக் கல்லூரி; சி. சிவறஞ்சினி - சரசாலை ஸ்ரீ கணேச வித்தியாலயம். (ஓ)

# புராண படனப் போட்டி முடிவுகள்

(சாவகச்சேரி)

தென்மராட்சி வலயக்கல்வி அலுவலகத்தினரால் சாவ. -டிறிபேக் கல்லூரியில் நடாத்தப்பட்ட புராணப் போட்டி முடிவுகள் வருமாறு,

முதலாம் இடம்: மீசாலை வீரசிங்கம் வித்தியாலயம் -பா. மயூறா, கு -மிதுனா

இரண்டாம்இடம்: உசன் இராமநாதன் மகாவித்தியாலயம் -யோ. விதுஷ்ஷன், சி. கனிஸ்லா.

மூன்றாவது இடம் :மட்டுவில் சந்திர மௌலீச வித்தியாலயம் – தி. ஆரணி, ச. மதுரா

**சான்றிதழ் பெறுவோர்**

கச்சாய் அ.த.க. பாடசாலை – தி- சுதாசினி, சி. சரண்யா.

நாவற் குழி ம. வித்தியாலயம்- சு. கயானி,சி.கம்சியா

வரணி ம. வித்தியாலயம்-க.யசிந்தா,இ. சங்கீதா.

மிருசுவில் அ.த.க.பாடசாலை- த. மேனகா, தி. மீரா.

கைதடி முத்துக் குமாரசாமி ம.வித்தியாலயம் - க. கஜீபன் ,தெ. அஜந்தன்

மட்டுவில் தெற்கு சரஸ்வதி அ.மி.த.க. பாடசாலை- சி. கம்சிஜா, ர.தவபாலனி

இவர்களுக்கான பரிசில் மற்றும் சான்றிதழ் வழங்கும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்று பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (29)

# மாகாண மட்டப் போட்டிகளில் பங்கேற்க அனுமதிக்குமாறு யாழ்.அரச அதிபரிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வடமாகாண பாடசாலைக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகளில் யாழ்.மாவட்ட மாணவர்களும் பங்குகொள்ளும் விதத்தில் போக்குவரத்து ஒழுங்கினையும் அதற்கான அனுமதியையும் வழங்குமாறு யாழ்.அரசாங் அதிபரிடம் குறித்த மாணவர்கள் சார்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் எதிர்வரும் 14 ஆம் திகதி வவுனியாவில் நடைபெறவுள்ளன. இப் போட்டிகளில் யாழ்.மாவட்ட மாணவர்களும் கலந்துகொள்ளவுள்ளனர்.

எனினும் யாழ்.மாவட்டத்திலிருந்து பிற இடங்களுக்கான போக்குவரத்து வசதி தடைப்பட்டுள்ளதால் அம் மாணவர்கள் இப் போட்டிகளில் பங்குகொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே இப் போட்டிகளில் பங்குகொள்ள மேற்படி மாணவர்கள் செல்வதற்கான போக்குவரத்து அனுமதியை வழங்குமாறு யாழ். அரசாங்க அதிபரிடம் யாழ்.மாவட்டப் பாடசாலைகள் விளையாட்டுக் குழுத் தலைவரும் யாழ். வலயக் கல்விப் பணிப்பாளருமான திருமதி. அ.வேதநாயகம் மாணவர்கள் சார்பில் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை, மேற்படி போட்டிகள் எதிர் வரும் 24 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளன.

இதில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கான பட்மின்ரன், சதுரங்கம், மேசைப்பந்து, கூடைப்பந்து போட்டிகள், மென்பந்து கிரிக்கெற், உடற்பயிற்சி, கரப்பந்தாட்டம், எல்லே, கபடி உட்பட மெய்வன்மைப் போட்டிகளும் நடைபெறவுள்ளன.

போட்டிகளில் வெற்றியீட்டும் மாணவர்களுக்கு பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன. (அ-5)

# யாழ்.போதனா வைத்தியசாலையில் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் புற்றுநோய் மருந்து சிகிச்சை பிரிவு எதிர்வரும் 9ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வைத்திய கலாநிதிகள் கணேசமூர்த்தி தம்பதிகளும், யாழ்.வர்த்தக சங்கத்தின் தலைவர் ஆர்.ஜனக்குமார் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.


இச் சிகிச்சைப் பிரிவு நெடுந் தூரங்களிலிருந்து வரும் புற்றுநோயாளர்கள் தங்கியிருந்து சிகிச்சை பெறக் கூடிய வகையில் குளிரூட்டப்பட்ட கட்டட வசதிகளுடன் தனி அலகாக உருவாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-5)

# மின் இணைப்புப் பயிற்சி

(கோண்டாவில்)

தமிழர் அகதிகள் புனர்வாழ்வு T.R.R.O நிறுவனத்தினால் கோண்டாவில் மத்திய கிராம முன்னேற்றச் சங்க சனசமூக நிலையத்தில் தொழில் வாய்ப்பின்றி உள்ளவர்களுக்கு சுய தொழில் பெற்றுக் கொடுக்கும் நோக்கோடு இலவசமாக மின் இணைப்பு பயிற்சி நடத்தப்பட்டு வருகின்றது.

இந்தப் பயிற்சி நெறியில் மேலும் பல மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்பட இருப்பதால் தமது சுய விவரக்கோவையுடன் உடனடியாக தொடர்பு கொள்ளுமாறு சன சமூக நிலையத் தலைவர் சி.ஆனந்தராசா அறிவித்துள்ளார். இப்பயிற்சி நிறைவில் சான்றிதழ் வழங்கப்படவிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஓ -12)




# மஹோற்சவம்

(சித்தன்கேணி)

தொல்புரம்-வழக்கம்பரை முத்துமாரி அம்பாள் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 11 தினங்கள் நடைபெறவுள்ளது.

15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை சங்காபிஷேகம், மாலை இடபவாகன திருவிழாவும், 17ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு இரதோற்சவமும், 18 ஆம் திகதி புதன்கிழமை காலை தீர்த்தோற்சவமும், மாலை கொடியிறக்கமும் இடம்பெறவுள்ளது. (ஓ-17)

# மலையின் ஐயனாரை தரிசிக்கத் திருவருள்

(யாழ்ப்பாணம்)

நயினையின் தென் கரையில் மலையிற் புலத்தில் மக்களைக் காத்து அருள் பாலித்துக் கொண்டு அமர்ந்துள்ளார் ஸ்ரீ மலையின் ஐயனார்.

உயர் திருவிழாக் காண வரும் அன்னை ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் அடியார்களுக்கு இவ்வாலத்திற்கு சென்று தரிசிக்கும் வாய்ப்பையும் ஐயனார்ஆலய அறங்காவலர் சபையினர் செய்திருக்கின்றார்கள்.

அன்னை ஸ்ரீ நாக பூஷணி அம்மாள் ஆலயத்தில் இருந்து ஐயனார் ஆலயம் வரை தினமும் விஷேட பஸ் சேவை நடைபெற்று வருகிறது. (அ)

# ஆங்கில தினப்போட்டி

(அல்வாய்)

வடமராட்சி வலய மட்ட ஆங்கில தினப் போட்டிகள் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு வட இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

அத்துடன் வட இலங்கை சங்கீத சபைப் பரீட்சைகளும் அதே பாடசாலையில் நடைபெற உள்ளதாக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (ஓ-19)

# மாற்று ஆற்றலுள்ள மாணவர்களால் நடாத்தப்படும் கல்விக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் சிவபூமி பாடசாலையில் கல்வி கற்கும் மாற்று ஆற்றலுள்ள மாணவர்களின் கல்விக் கண்காட்சி பாடசாலை மண்டபத்தில் இம்மாதம் 9, 10 (திங்கள், செவ்வாய்) திகதிகளில் காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை நடைபெறும்.

அனைவரும் வருகை தந்து மாணவர்களின் ஆற்றலுக்கு ஊக்கமளித்து கண்காட்சியை சிறப்பிக்குமாறு சிவபூமி பாடசாலை சமூகத்தினர் அழைக்கின்றனர். (ஓ)

# விளையாட்டுவிழா

(சித்தன்கேணி)

சித்தன்கேணி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கமும் சனசமூக நிலையமும் நடாத்தும் பாலர் வகுப்பின் 43ஆவது ஆண்டு விளையாட்டு விழா சித்தன்கேணி மகா கணபதி பிள்ளையார் ஆலய வீதியில் 12ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு திருமதி. பரமேஸ்வரி பஞ்சாட்சரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக லயன் வைத்திய கலாநிதி .எஸ் சதாசிவம், வட்டு. கிழக்கு மாதர் சங்க தலைவர் திருமதி. சர்வேஸ்வரி சதாசிவம் மற்றும் கௌரவ விருந்தினர்களாக சித்தன்கேணி பிள்ளையார் ஆலய சிவாச்சாரியார் சிவஸ்ரீ.ச.மதுசூதனக் குருக்களும் சித்தன்கேணி சிவன் ஆலய சிவாச்சாரியார் சிவஸ்ரீ .ச.வாசுதேவக் குருக்களும்கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ஓ-17)

# வருடாந்த தடகள போட்டி

(யாழ்ப்பாணம்)

பலாலி ஆசிரிய கலாசாலை இல்லங்களுக்கிடையிலான வருடாந்த தடகளப் போட்டி இன்று சனிக்கிழமை மு.ப. 8மணிக்கு கோண்டாவில் இராமகிருஷ்ண விளையாட்டு மைதானத்தில் உடலாளர் மன்ற காப்பாளர் ரா.தர்மகுலேந்திரன் தலைமையில் நடைபெறவுள் ளது.

இந்நிகழ்வில் போட்டி மேலாளராக பலாலி ஆசிரிய கலாசாலை அதிபர் த.காங்கேய பிள்ளை கலந்துகொள்வார். முதன்மை விருந்தினராக யாழ். வலயக்கல்விப்பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகமும் சிறப்பு விருந்தினராக வலிகாமவலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் இ.தமிழ்மாறனும் கலந்துகொள்ளவுள்ளனர். (அ-6)

# மீள் பரீட்சைக்கான பதிவுகளை மேற்கொள்ளல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப் படிப்புகள் பீடத்தில் 2004/2005 கல்வி யாண்டிற்கான கலைமுதற் தேர்வுக்குத் தோற்றி சித்தியடையத் தவறிய மாணவர்கள் தங்கள் மீள் பரீட்சை பதிவுகளை எதிர்வரும் 30.06.2008 முன் மேற்கொள்ளுமாறு பதிவாளர் கேட்டுள்ளார்.

மற்றும் சித்தி அடைந்த மாணவர்கள் தங்கள் பெறுபேற்று சான்றிதழ்களினை இரு வாரங்களின் பின்னர் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஓ-3,4)







அண்மையில் இடம்பெற்ற கரம்பொன் கிழக்கு சனசமூக நிலைய காளிகோவில் முன்பள்ளி வருடாந்த விளையாட்டுப் போட்டியில் முன்பள்ளி மாணவர்கள் பாண்ட் வாத்திய இசையுடன் ஊர்காற்றுறை பிரதேச சபைச் செயலாளர் ஏ.கணேசானந்தராசா, உதவி அரசாங்க அதிபர் பணிமனையின் நிர்வாக உத்தியோகத்தர் மற்றும் ஆசிரியர்களை அழைத்து வருவதனையும் முன்பள்ளி ஆசிரியர் உரையாற்றுவதையும், பிரதம விருந்தினர் முன்பள்ளி மாணவருக்கு பரிசு வழங்கிக் கௌரவிப்பதனையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-கரம்பொன் நிருபர்)

# கஞ்சா வைத்திருந்தாரென நிரூபணம் முகமெட் ஆசிப்பிற்கு வாழ்நாள் தடை ?



(டுபாய்)

சர்ச்சைக்குரிய முகமெட் ஆசிப் போதைப் பொருளான கஞ்சா வைத்திருந்தது நிரூபணமாகியுள்ளது. இவர் மீது நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்படாததால் விரைவில் டுபாயை விட்டு வெளியேற்றப்படுவார் என தெரிகிறது ஒருவேளை வழக்குத் தொடுக்கப்பட்டால் 4 ஆண்டுகள் சிறைத்தண்டனை மற்றும் போட்டிகளில் பங்கேற்க வாழ்நாள் தடை விதிக்கப்படலாம்.

பாகிஸ்தான் வேகப்பந்து வீச்சாளர் முகமெட் ஆசிப் இந்தியாவில் நடந்த ஐ.பி.எல் தொடரில் டில்லி டேர் டெவில்ஸ் அணிக்காக விளையாடினார். இத்தொடர் முடிபடைந்த நிலையில் டுபாய் வழியாக பாகிஸ்தான் திரும்பினார். ஆனால் டுபாய் விமான நிலையத்தில் நடந்த சுங்க சோதனையின் போது அவரது பையில் போதைப் பொருள் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. இதையடுத்து அவர் கைது செய்யப்பட்டார். பின்னர் அவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட பொருள், ரத்தம் மற்றும் சிறுநீர் ஆகியவை பரிசோதனைக்கு அனுப்பப்பட்டன.

இதற்கிடையில் ஆசிப்பை மீட்டு பாகிஸ்தான் அழைத்துச் செல்ல அந்நாட்டு கிரிக்கெட் சபை உயர் அதிகாரி நதீம் அக்ரம் டுபாய் சென்றார். நேற்று முன்தினம் ஆசிப்பின் பரிசோதனை முடிவு வெளியிடப்பட்டது. இதில் அவர் 2.5 கிராம் கஞ்சா வைத்திருந்தது உறுதி செய்யப்பட்டுள்ளது. இருந்தாலும் அவர் மீது இன்னும் நீதிமன்றில் வழக்கு தொடரப் படாததால் விரைவில் டுபாயை விட்டு வெளியேற்றப்படுவார் என நதீம் தெரிவித்தார். இது குறித்து அவர் கூறுகையில், ஆசிப் விரைவில் விடுவிக்கப்படுவார். இதற்கான உத்தரவில் டுபாயின் சட்டமா அதிபர் கையெழுத்திட இருக்கிறார் என்றார். (5)

## தெற்காசிய கால்பந்தில் இந்தியா அபாரம்

தெற்காசியக் கால்பந்துப்போட்டி மாலைதீவில் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று முன்தினம் நடந்த தனது 2-வது ஆட்டத்தில் இந்திய அணி 2-1 என்ற கோலில் பாகிஸ்தானை வீழ்த்தியது.

இந்திய அணியில் என். பி. பிரதீப் 25-வது நிமிடத்திலும்,ஸ்டீவென் டியாஸ் 45 ஆவது நிமிடத்திலும் கோல் அடித் தனர்.


பாகிஸ்தான் அணிதரப்பில் அட்னன் பரூக் 88-வது நிமிடத்தில் பதில் கோல் திருப் பினார்.

நடப்பு சம்பியன் இந்திய அணி தனது முதல் ஆட்டத்தில் 4-0 என்ற கணக்கில் நேபாளத்தை தோற்கடித்து இருந்தது. தொடர்ந்து 2 வெற்றி பெற்றுள்ள இந்திய அணி அரையிறுதியை உறுதிசெய்துள்ளது. (5)

# கெவின் பீற்றர்சன் சிறப்பான சதம்; இங்கிலாந்து வலுவான நிலையில்

(நொற்றிங்காம்)

பீற்றர்சனின் சதத்தின் மூலம் இங்கிலாந்து அணி முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 364 ஓட்டங்களை எடுத்தது.பதிலுக்கு தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பாடும் நியூசிலாந்து அணி நேற்று இரண்டாம் நாள் ஆட்ட தேநீர் இடைவேளையின் போது 2 விக்கெட்டுக்களையிழந்து 52 ஓட்டங்களை எடுத்திருந்தது.



இங்கிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து அணி 3 டெஸ்ட், 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதல் நடைபெற்று முடிந்த 2 டெஸ்களில் முதலாவது டெஸ்ட் சமநிலையானதுடன் 2 ஆவது டெஸ்ட்டில் இங்கிலாந்து அணி வெற்றி பெற்று தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்க, தீர்க்கமான 3 ஆவதும் இறுதியுமான டெஸ்ட் நேற்று முன்தினம் நொற்றிங்காமில் ஆரம்பமானது.

இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற நியூசிலாந்து அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதனடிப் படையில் முதலில் துடுப்பெடுத் தாடிய இங்கி லாந்து அணி ஓபிறின் , மில்ஸின் அபார பந்து வீச்சில் 86 ஓட்டங்களை மாத் திரம் எடுத்து 5 விக்கெட்டுக்களை இழந்து திணறியது.எனினும் 6 ஆவது விக்கெட்டுக் காக இணைந்த பீற்றர்சன், அம்புறுஸ் ஜோடி சிறப்பாக ஆடி இங்கிலாந்து அணியை சரிவி லிருந்து மீட்டனர்.சிறப்பாக ஆடிய பீற்றர்சன் சதம் கடந்து அசத்தினார். மறுமுனையில் அம்புறுஸ் அரைச்சதமடித்தார். இந்த ஜோடி 6 ஆவது விக்கெட்டுக்காக 161 ஓட்டங்களை எடுக்க சிறப்பாக ஆடிய பீற்றர்சன் 115 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த பிரோட்டும் அரைச்சதம் கடக்க இங்கிலாந்து அணி அதன் முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 364 ஓட்டங்களை எடுத்து கௌரவமான இலக்கை அடைந்தது.

இதில் பீற்றர்சன் 115 ஓட்டங்களையும், அம்புறுஸ் 67 , பிரோட் 64 ஓட்டங்களையும்



ஸ்ரொரஸ் 37 ஓட்டங்களையும் எடுத்தனர். பந்துவீச்சில் ஓப்ரின் 4 விக்கெட்டுக்களையும் மில்ஸ் 3 விக்கெட்டுக்களையும் மற்றும் மார்ட்டின், ஓரம் , விக்டோரி ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிவரும் நியூசிலாந்து அணி நேற்று இரண்டாம் நாள் ஆட்ட தேநீர் இடைவேளையின் போது 2 விக்கெட்டுக்களை இழந்து 52 ஓட்டங்களை எடுத்திருந்தது. களத்தில் ஆட்டமிழக்காமல் ஹவ் 22,ரெய்லர் 20 ஓட்டங்களையும் எடுத்திருந்தனர். பந்து வீச்சில் அன்டர்சன் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினார்.(5)

# முதலிடம் பிடிக்கிறார் அனா இவானோவிச்

(பாரிஸ்)

செர்பியாவைச்சேர்ந்த டென்னிஸ்வீராங்கனை மகளிர் டென்னிஸ்தரவரிசையில் முதலிடத்தை பிடிக்கிறார்.பிரெஞ்ச்ஓபன் டென்னிஸ்போட்டிகள்தற்போது நடைபெற்று வரும் நிலையில் இறுதிப் போட்டிக்குள் இவானோவிச் நுழைந்துள்ளார். அவர் டினாரா சபினாவுடன் இறுதிச் சுற்றில் மோதுகிறார்.



இந்த நிலையில் உலக மகளிர் டென்னிஸ் தர வரிசையில் தற்போது முதலிடத்தில் உள்ள ரஷ்யாவின் மரியா ஷரபோவாவை பின்னுக்குத்தள்ளி இவானோவிச் முதலிடத்தை பிடிக்கவுள்ளார். நாளை மறுதினம் வெளியாகவுள்ள தரவரிசைப்பட்டியலில் அவர் முதலிடம் பிடிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அரையிறுதியில் வெற்றி பெற்ற உடனேயே அவர் முதலிடத்தை பிடிப்பதற்கு தேவையான புள்ளிகளை பெற்றுள்ளார்.

முதலிடத்தைப் பிடித்திருப்பதன் மூலம் தனது கனவு நனவாகியிருப்பதாக இவானோவிச் தெரிவித்துள்ளார். முதலிடத்தைப் பிடிப்பதற்கான போட்டியில் இவானோவிச்சுடன் ஜோன்கோவிச், ஷரபோவா மற்றும் குஸ்நெட்சோவா ஆகியோர் இடம் பெற்றிருந்தனர்.

மற்ற மூவரும் தோல்வியை தழுவி விட்ட நிலையில் இவானோவிச் முதலிடத்தை பிடித்துள்ளார். கடந்த 1970 ஆம் ஆண்டு முதல் வெளியிடப்படும் தரவரிசைப்பட்டியலில் முதலிடத்தைப்பிடிக்கும் 17 ஆவது வீராங்கனை மற்றும் முதலிடம் பிடிக்கும் முதல் செர்பிய வீராங்கனை இவானோவிச் என்பது குறிப்பிடத்தக்கது. (5)

# பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் இறுதிப்போட்டியில் இன்று இவானோவிச் - சபினா மோதல்

(பாரிஸ்)

பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் தொடரின் இறுதிப்போட்டியில்செர்பியாவின் இவானோவிச் ரஷ்யாவின் டினரா சபினா மோதுகின்றனர். முதல் முறையாக கோப்பை வெல்ல இருவரும் தயாராக இருப்பதால் இன்று நடக்கும் இறுதிப்போட்டி மிகவும் பரபரப்பாக இருக்கும்.

ஆண்டின் இரண்டாவது கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் தொடரான பிரெஞ்ச் ஓபன் பாரிசில் நடக்கிறது. நேற்று முன்தினம் நடந்த விறுவிறுப்பான அரையிறுதியில் ரஷ்யாவின் டினரா சபினா (தர வரிசையில் 13)தரவரிசையில் 4வது இடத்திலிருக்கும் சக நாட்டு வீராங்கனை ஸ்வெட்லானா ஸ்னெட்சோவை எதிர் கொண்டார். ஷரபோவா (நான்காவது சுற்று) டெமன்டிவா (காலிறுதி) என முன்னணி வீராங்கனைகளை வென்று சிறப்பான நிலையில் இருந்த சபினா நேற்று முன்தினம் கலக்கினார். முதல் செட்டில் அசத்தலாக செயல்பட்டு 6:3 என தன்வசப்படுத்தினார். இரண்டாவது செட்டையும் 6:2 என எளிதாக வென்றார். இறுதியில் 6:3 ,6:2 என்ற நேர் செட்களில் வெற்றிபெற்று இறுதிப்போட்டிக்கு முன்னேறினார்.

நேற்று முன்தினம் நடந்த 2வது அரையிறுதிப்போட்டியில் தரவரிசையில் இரண்டாவது இடத்திலிருக்கும்செர்பியாவின் இவானோவிச் சக நாட்டுவீராங்கனை ஜோன்கோவிச்சைஎதிர் கொண்டார். இதில் கடந்த முறை இங்கு இறுதிப் போட்டி வரை முன்னேறிய அனுபவம் கொண்ட இவானோவிச் சிறப்பாக விளையாடினார். முதல் செட்டை 6:4 என வென்றார். இதையடுத்து சுதாகரித்து கொண்ட ஜோன் கோவிச் இரண்டாவது செட்டை 6:3 என தன்வசப்படுத்தினார். வெற்றியாளரை நிர்ணயிக்கும் மூன்றாவது செட்டை இவானோவிச் 6:4 என கைப்பற்றினார். இறுதியில் 6:4 ,3:6,6:4 என்ற செட்களில் இவானோவிச் கைப்பற்றி இறுதிப்போட்டிக்கு தகுதிபெற்றார்.


# பதான் சகோதரர்கள் குஜராத்தில் ரூ.2.5 கோடியில் வீடு கட்டுகிறார்கள்

கிரிக்கெட்டில் கலக்கி வரும் சகோதரர்கள் இர்பான் பதான், யூசுப் பதான் சாதாரண குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். இர்பான் பதான் இந்திய அணியில் இடம் பெறுவதற்கு முன்பு பதான் குடும்பத்தினர் குஜராத் மாநிலம் வதோதராவில் மசூதிக்கு சொந்தமான ஒரு அறை கொண்ட வீட்டில் தங்கியிருந்தனர்.

அவர் கிரிக்கெட்டில் சம்பாதித்த பிறகு அங்கு 4 படுக்கை கொண்ட பெரிய வீட்டை விலைக்கு வாங்கி குடியேறினார்கள். அதன் பிறகு அவருடைய சகோதரர் யூசுப் பதானும் சிறப்பாக விளையாடி பணம் குவித்தார். வீட்டில் வருமானம் கொட்டியது. இதனால் பெரிய பங்களா ஒன்றை கட்ட முடிவு செய்தனர். இதற்காக அங்கு பலான்டிபல் என்ற இடத்தில் இடம் வாங்கி புதிய பங்களா கட்டிவருகின்றனர்.

15ஆயிரம் சதுர அடி நிலப்பரப்பில் பிரமாண்டமாக இது கட்டப்படுகிறது. உடற் பயிற்சி கூடம், நீச்சல் குளம், புல்வெளி ஆகியவையும் அமைக்கப்படுகின்றது. இதற்காக ரூ.2.5கோடி செலவு செய்கிறார்கள். விரைவில் பதான் குடும்பத்தினர் இந்த வீட்டில் குடியேற உள்ளனர். (5)

# அதிபர் தேர்தலில் ஜனநாயக கட்சி வெற்றிபெற்றால் துணை அதிபராவதற்கு ஹிலாரி விருப்பம் தெரிவிப்பு




(நியூயோர்க்)

அமெரிக்கத்துணை அதிபராவதற்கு ஹிலாரி கிளின்டன் விருப்பம் தெரிவித்துள்ள நிலையில். "துணை அதிபர் பதவிக்கான நபரைத் தேர்வு செய்வதில் அவசரம் காட்டப்போவது இல்லை என, ஒபாமா தெரிவித்துள்ளார். அமெரிக்க அதிபர் பதவிக் கான ஜனநாயகக் கட்சி வேட்பாளராக கருப் பினத் தலைவர் ஒபாமா தேர்வு செய்யப்பட் டுள்ளார். தனக்கு கடும் போட்டியை ஏற்படுத் திய முன்னாள் அதிபர் கிளிடனின் மனைவி ஹிலாரியை தோற்கடித்து அமெரிக்காவின் வரலாற்றில் புதிய திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளார். தனது தோல்வியை பெருந் தன்மையுடன் ஏற்றுக்கொண்டு ஒபாமாவிற்கு ஆதரவு தெரிவித்துள்ள ஹிலாரியை அடுத்ததாக அமெரிக்கத் துணை அதிபர் பதவிக்கு குறிவைத்துள்ளார்.

**ஒபாமா ஆதரவாளர் எதிர்ப்பு**

"அதிபர் தேர்தலில் ஜனநாயகக் கட்சி வெற்றி பெற்றால், துணை அதிபர் பதவியை ஏற்க விரும்புகிறேன். இதற்கு கட்சியின் மூத்த தலைவர்கள் எனக்கு ஆதரவு அளிக்க வேண்டும் என்று, கட்சியின் முக்கிய தலைவர்களிடம் தனிப்பட்ட முறையில், ஹிலாரி வேண்டுகோள் விடுத்திருந்தார். இதுபற்றி தனது ஆதரவாளர்களுடன் ஒபாமா ஆலோசனை நடத்தினார் ஹிலாரி, துணை அதிபராக தேர்வு செய்யப்பட்டால் ஏற்படும் சாதக, பாதகங்கள் குறித்து இவர்கள் விவாதித்தனர். பின் அனைவரும் ஒரு மனதாக ஹிலாரி, துணை அதிபராவதற்கு எதிர்ப்பு தெரிவித்தனர்.

இதையடுத்து, வேகமாக அரசியல் காய் நகர்த்தினர், ஒபாமா துணை அதிபர் பதவிக்கு தகுதியான நபரை தேர்வு செய்வதற்காக. மூன்று உறுப்பினர்களை கொண்ட குழுவை நியமித்துள்ளார். இதில், முன்னாள் அதிபர் ஜான் கென்னடியின் மகள் கெரோலின் கென்னடி, முன்னாள் துணை அட்டர்னி ஜெனரல் எரிக் ஹோல்டர் மற்றும் ஜிம் ஜான்சன் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். (அ-5)



## கிளின்டனுக்கு நடிகையுடன் தொடர்பு அமெரிக்காவில் பரபரப்பு -நடிகை மறுப்பு

(நியூயோர்க்)

முன்னாள் அமெரிக்க அதிபர் பில் கிளின்டன் மற்றும் ஹாலிவுட் நடிகை ஒருவருக்கும் தொடர்பு இருப்பதாக வெளியான செய்தி அமெரிக்காவில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்காவைச் சேர்ந்த வேனிட்டி ஃபேர் எனும்பத்திரிகையில் பில் கிளின்டன் பற்றி கட்டுரை ஒன்று வெளியிட்டுள்ளது.

அந்தக் கட்டுரையில் ஹாலிவுட் நடிகை கினா கெர்ஷான் என்பவருக்கும் கிளின்டனுக்கும் நெருக்கமான தொடர்பு இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தச் செய்தி பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

இதனிடையே இந்த செய்திக்கு நடிகை கினா கடும் மறுப்பு தெரிவித்துள்ளார். பொய் செய்தியை வெளியிட்டதாக அந்தப் பத்திரிகைக்குஅவர் நோட்டீஸ் அனுப்பி உள்ளார்.

கிளின்டனும், தானும் மூன்று முறை ஒரே அறையில் இருப்பதாக குறிப்பிட்டுள்ள அவர் அப்போது 10- க்கும் மேற்பட்டவர்கள் பார்வையிலேயே தாங்கள் தங்கியிருந்ததாகவும் தெரிவித்துள்ளார்.

எனவே அந்தப் பத்திரிகை பொய்யான செய்தியை வெளியிட்டிருப்பதாக கூறியுள்ள அவர் இதற்கு மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார். (அ-5)

## 28 ஆயிரம் சினிமாப் படங்களை பார்த்து 63 வயதான வேல்ஸ் மாநிலத்தவர் சாதனை

(லண்டன்)

இங்கிலாந்தில் உள்ள வேல்ஸ் மாநிலத்தைச் சேர்ந்தவர் கிவிலிம் ஹக்ஸ். 63 வயதான அவர் 28,075 சினிமாப் படங்களைப் பார்த்து உலக சாதனை படைத்திருக்கிறார். இவர் வாரத்துக்கு14 சினிமாப் படங்களைப் பார்க்கும் பழக்கம் உள்ளவர். இப்படி படம் பார்த்து தன் வாழ்நாளில்28,075 படங்களைப் பார்த்து இருக்கிறார். இந்த ஆண்டு இதுவரை அவர் 213 சினிமாப் படங்களைப் பார்த்துவிட்டார். இவர் முதன் முதலாக தன் 4 ஆவது வயதில் 1956- ஆம் ஆண்டு சினிமா பார்த்தார். அது முதல் தொடர்ந்து சினிமா பார்த்து வருகிறார்.

தினமும் இரவில் 9 மணி முதல் 12மணி வரை படம் பார்ப்பார். இவர் மனைவி ஏர்லிஸ்சும் படம் பார்ப்பார். ஆனால் இவர் அளவுக்கு அல்ல இவருக்கு பிடித்த படம் லோரன்ஸ் ஒவ் அரேபியா , இங்கிலாந்து டைரக்டர் டேவிட் லீன் தான் இந்தப் படத்தை இயக்கினார். (அ-5)

### உலக தரிசனம்

## மகன் தண்ணியடித்தால் அப்பாவுக்கு தண்டனை — பிரிட்டன் அரசு அதிரடி நடவடிக்கை

(லண்டன்)

இளம் வயதினரிடையே குடிப் பழக்கம் அதிகரித்துள்ளதை அடுத்து, பிரிட்டன் அரசு அதிரடி நடவடிக்கையில் இறங்கியுள்ளது . "18 வயதிற்குட்பட்ட இளைஞர்கள் பொது இடங்களில் குடித்துவிட்டு ஆட்டம்போட்டால், அவர்களின் பெற்றோர், சிறையில் அடைக்கப்படுவர்" என, எச்சரித்துள்ளது. பிரிட்டனில் இளைய தலைமுறையினரிடையே குடிப்பழக்கம் அதிகரித்துள்ளது.

18 வயதிற்குட்பட்டவர்களில், ஐந்து பேரில் ஒருவர் தினமும் குடிக்கும் பழக்கம் உள்ளவர்களாக உள்ளனர். இதனால், கடந்த சிலஆண்டுகளாக பிரிட்டனில் மது விற்பனை பல மடங்கு அதிகரித்துள்ளது. குடித்துவிட்டு, பொது இடங்களில் இடையூறும் ஏற்படுத்தி வருகின்றனர். இதனால், சட்டவிரோத செயல்கள் அதிகரித்துள்ளன. இந்தப் பிரச்சினைக்கு முற்றுப் புள்ளிவைக்க, பிரிட்டன் அரசு முடிவு செய்துள்ளது.

பிரிட்டன் உள்துறை செயலர் ஜாக்வி ஸ்மித் கூறியதாவது, 18 வயதிற்குட்பட்ட இளைஞர்களிடையே குடிப்பழக்கம் அதிகரித்து வருவது , கவலை அளிக்கிறது. இதற்காக, ஏராளமான பணத்தைச் செலவழித்து விழிப்புணர்வு பிரசாரம் செய்யப்பட்டது. தகுந்த பலன் கிடைக்கவில்லை. இதையடுத்து ,கடுமையான நடவடிக்கைகளை எடுக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

தங்கள் குழந்தைகளை சிறந்தவர்களாக உருவாக்குவதில் பெற்றோருக்கு முக்கிய பொறுப்பு உள்ளது.

பொது இடங்களில் குடித்துவிட்டு ரகளையில் ஈடுபடும் இளைஞர்களை முதல் முறையாக எச்சரிப்போம். மீண்டும் அதே செயலில் அவர்கள் ஈடுபட்டால் அவர்கள் கைதுசெய்யப்படுவர். அபராதமும் விதிக்கப்படும். சம்பந்தப்பட்ட இளைஞர்களின் பெற்றோரும் கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்படுவர். 18 வயதிற்குட்பட்டவர்களுக்கு மது விற்பனை செய்யும். கடைகளை மூடவும் உத்தரவிடப்பட்டுள்ளது. இவ்வாறு ஸ்மித் கூறினார். (அ-5)

# வெளிவாரி கலைமுதற்தேர்வு (2004/2005) — சித்தியடைந்தோர் பெயர் விபரம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக வெளிவாரி மாணவர்களுக்கான (2004/2005) கலைமுதற் தேர்வில் சித்தியடைந்தோர் பெயர் விபரம் வருமாறு,

ந. சிவசங்கரி ,கு. மஞ்சுளா, தே. இராஜேஸ்வரன், த.கிருபாகரன், க. முரளிதரன், ஆ. ராஜபாலசிங்கம், சி.அல்பன் வசந்தரூபன், பா.தணிகைவேல், ச.திரிவேணி திரிலோசனி, ந.நளாயினி, செ.திகழ்சோதி, வ.ரேணுகா, க. இளங்கோ, செ.அபிராமி , ஸ். அருள்மேரி , ம. டனிஸ்ரன் ,விஜயகுமார், சி குணசீலன், ச.கௌசிகன்.

மு. குணேநேசன் ,ப. மாலதி, க.நாதன், யோ. பிரதீப் , தெ. புஸ்பமலர், ச. ருக்ஷி, தி.ஷாமினி, மு. அனுஷா, ஞா. பிறீடா துஸ்யந்தி , ந.கௌசல்யா , தி. ஜீவரட்ணம், வி.ஜெயகாந்தன், ப. கஜந்தினி , செ. கவிதா, த.கவிதா,சோ.கிருஷ்ணதாஸ், இ. மச்சக்காந்தி, ச. மகிந்தினி.

கு. மங்களகல்யாணி, அ. முகுந்தினி, தி. நவநீதகாந்தன், ச. நிலாசினி, பா. பிரதீபன், பே.குயின் சுகந்தி, ப. குயின்சி, த. இராதாகிருஷ்ணான், தி. சத்தியதீபன், கா. செல்வமனோஜா, கு. செல்வராணி, அ. செந்தமிழ் செல்வி, நா.சௌமினி, லோ. ஸ்ரனிஸ்லாஸ், சு. சபாசினி, மா. சுகன்யா , கு . சுரேக்கா ,சீ. சுரேஸ்குமார், க. சுதர்சன், க.வனி தா, வ.வனிதா, சி. கௌசினி ,வே. சுதாராணி, தே.அகிலா, இ . அனுஷியா, ந.அரவிந்தன், அ.அருட்செல்வி, கி. அருள்நிதி, க. பகீரதி , பா.பாலரஜீவன், நா. பாரதி, சி.சந்திரலைலா, வி.சந்திரிக்கா, செ.டென்சில்டா, ம.ஈஜீன்சர்மிலானி , அ.பிரான்சிஸ், த. கௌரி, சி. யசோதா, நி. ஜெகாநந்தன்,இ.ஜெயந்தினி, ம. ஜெயப்பிரதா, ந.ஜொய்சி பிரபாலினி, ஜே.யூடிற் சுஜிதா , இ. கஜமுகன், சோ. கஜனி, மா. கலிஸ்ரஸ்

க.நந்திதா, இ.கணேசராணி, க.கார்த்திகா, ஏ.கார்த்திகா, ஜெ.கவிதா, சு.கவிதா, நா.காயத்திரி, பொ.கிரிஜா, வா.கிருபாநந்தி, ஞா.கிருபாதீசன், சி.கிருத்திகா, இ.குலரஞ்சினி, இ.குமுதா, கு.லவகுசா,ச.மாலதி, த.மணிவண்ணன்,ந.மஞ்சுளா, வி.மேரி கொலஸ்ரிகா, லோ.மீரா.

ம.மேனகா துஸ்யந்தினி, டா.மை பௌனி, க.நாகதூதன்,த. நித்தியா, த.பர்மினா, கு.பிரசாந்தினி, செ.பிரசாத்,லோ.பிரதாப், தி.பிருந்தா காந்தி, பா.பிரமிளா, பா.பிரேமினி, சி.பிறின்சா, அ.பிரியதர்சினி, ஜெ. ராஜமல்லிகை, இ.ரம்யா, க.றொபினா உதயந்தி, த.சங்கீதா.

செ.அனுஷா, செ.செல்வரஞ்சன், தி.சர்மிலா, ச.சிவஐங்கரன், ச.சிவதர்மினி, தி. சௌக்யா, ந.சுபாசினி,சு.சுஜாதீப்,சி.சுரேக்கா, ந.சுதாகர்.

வே.சுவேதா, நா.தனுஷா, அ.தாரணி, ந.தாரிணி, கு.தர்ஷிகா,க.தர்ஷினி, மா.தயாநிதி, ஏ.தேவகி,ச.துசிதா, த.உஷாநந்தி, க. உதயச்செல்வி,த.உதயராஜினி,இ.வாசுகி, கு .விஜயகுமார், த.விேனயோ, சி.யாழினி, பொ.யோகேஸ்வரி.

யோ.கௌரி,இ.சுதர்சன்,ம.அகல்யா,ச. அகிலா,த.அனோஜா, தெ.அன்புவடிவேல், பி.அன்ரனிற்றா பிரியந்தினி, ஜே.அன்ரனீஸ் பெர்னாண்டோ,அ. அன்ரன்தயாஸ், சு.அனுசியா,அ.அரிப்பிரியை.

இ.அருள்நேசன், ம.அருள்பிரசாத், செ. பவானி,அ.பகீரதி, ஜோ.கரோலின் அகுஸ்ரினா, ஸ்.டிலோசினி, இ.டெ்றின் சுதர்சினி, பி.கௌரி மனோகரி, வே.கௌரீஸ்வரி, மு. ஹரன், வ.இன்பநிதி, பே.இசைமதி, ம.ஜர்ஷா, அ.ஜேந்தினி.

கு.ஜெயமாறன், ந.ஜெயந்தினி, சி.ஜெயந்தினி, ப.ஜெயவதனி, வி.யூனியா, து.கஜன், ச.கஜேந்தினி, கே.கார்த்திகேயினி, ஏ.கார்த்திகா, செ.காயத்திரி, செ.கேமகுணா.

ந.கேமராஜ், சு.கேதராணி, ந.கிருஷ்ணரதி, வே.கௌசலா, சி.கௌசிகா, க.குகதீபன், த.லலிதா, க.மயூரன், ஞா. மறின் செலஸ்ரினா, இ.மரியசுவர்ணா, அருட் சகோதரி மேரி அஞ்சலினி, அ.மேரிசுதர்சினி, ஜெ. மயூரன், ச.மேகரலா, இ.மேனகா, ந.மோகனப்பிரியா, ப.மோகன்யா, ந.நந்தினி, செ.நர்மதா, பா.நெமினா, ச.நிலாகினி, ச.நிமாலினி, மா.நிரஞ்சலா, அ.நிஷாந்தினி, சி.நித்தியகல்யாணி.

லோ.பிரகலாதன், சி.பிரஷாந்தி, ஜோ .பிரதீபா, க.பிரியா, மெ.பிரிஸ்ரன், செ.ரம்யா, கா.ரேணுகலா, ஜெ.றெக்சன், இ.றிச்சர்ட் லெபனான், வி.ரோகினி, ச.றசீதா, ஜே.சகாய மேரி, தி.சஜீலா, ச.சங்கீதா.


ஜோ.சங்கீதா, க.சங்கீதா, து.சர்மிலா, ம. சசிரேகா, இ.செவ்வந்தி, கா.சர்மிளா, அ. சறோமி றஞ்ஜிகா, செ.ஷெரின் மேரி சியாமளா, த.சோபிகா, லோ.சுகன்யா ,ந.சிவாஜினி, ஜெ.சிவகுமாரி.

சி.சிவரஞ்சினி, கோ.சிவசக்தி, ப.சிவசக்தி , த.ஸ்ரீகமலநாதன், செ.சுகன்யா, சா.சுகிர்தா, வெ.சுகிர்தா, சு.சுஜாதா,ந.சுதாஜினி, ஜீ.சுகன்யா, த.சுபைதா.

க.சுதாகரன், சி.சுதாகரன், கா.சுதாமதி, சி. சுதாநிதி, சு.சுத-ந்தினி, தி.சுதர்சன் , எ.சுதர்சினி, லூசியன் இ.சுதர்சினி, செ.சுதர்சினி. ந.தாட்சா யினி, அ.தம்பிராஜா.

வே.தர்மிகா, பா. தர்ஷினி, த.தவமலர். ப.தவராசா, சி.தயாரதி, அ. தெய்வமலர், ச. திருமகள், மு.திருமால், அ.திரேசா சசிகலா. து.துராஜினி, சு.துஷிதா. (தொடரும்)

# இலங்கையில் நடைபெறும் போராட்டத்தை பேச்சுவார்த்தை மூலம் தீர்க்க முடியும்



"இலங்கை விவகாரத்தில் அமைதியைத் தவிர வேறு எந்த உள்நோக்கமும் எங்களுக்கு இல்லை."

நான் எப்பொழுதும் நடக்க முடியாதவைகளையே கனவுகண்டுள்ளேன். ஆனால் அவை நடந்துள்ளன. கொசோவா, அயன்லாந்து, பாகு ஆகிய இடங்களில் நடைபெற்ற போராட்டங்களை வாழும் கலையின் முக்கிய பங்கால் முடிவுக்குக் கொண்டு வரமுடிந்தது. அந்த வகையில் ஸ்ரீலங்காவில் நடைபெறும் போராட்டத்தையும் பேச்சுவார்த்தைகளால் தீர்க்கமுடியும் என்ற கருத்தை தள்ளிவிடமுடி யாது. இவ்வாறு வாழும் கலை அமைப்பின் ஸ்தாபகத் தலைவர் பூஜ்ய ஸ்ரீ ஸ்ரீரவிசங்கர் சுவாமிகள்தெரிவித்துள்ளார்.

*"அமைதியை மீட்பதற்கும் மக்களின் துயர் துடைப்பதற்கும் எனது விஜயம் பயன்படும் என்றால் உலகத்தின் ஓரத்திற்கே செல்லக் கூட நான் தயங்கமாட்டேன்"*

**கேள்வி: நீண்டகாலமாக ஸ்ரீலங்காவில் நடைபெறும் ஆயுதப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வர மொழி சார்பின்றி உங்களால் உதவ முடியும் என்று நம்புகிறீர்களா?**

ஸ்ரீஸ்ரீ: நான் எப்போதும் நடக்க முடியாதவைகளையே கனவு கண்டுள்ளேன். ஆனால் அவை நடந்துள்ளன! வாழும் கலை நிறுவனத்தைத் தொடங்கிய போது இதே கேள்வியைத் தான் என்னிடம் கேட்டனர். இப்போது அது 152 நாடுகளில்பரவியுள்ளது அல்லவா? கொசோவா, அயர்லாந்து, பாகு ஆகிய இடங்க ளில் நடைபெற்ற போராட்டங்களை வாழும் கலையின் முக்கிய பங்கால், முடிவுக்குக் கொண்டுவரமுடிந்தது என்றால் நிச்சயம் கிடைக்காது என்று பலரும் கருதிய இந்திய சுதந்திரத்தை மகாத்மாகாந்தியால் பெற்றுத்தர முடிந்தது என்றால் –ஸ்ரீலங்காவில் நடைபெறும் போராட்டத்தைப் பேச்சுவார்த்தையால் தீர்க்க முடியும் என்னும் கருத்தை தள்ளி விடக்கூடாது.

**கேள்வி: நீங்கள் ஆன்மீகத்தின் மீது கொண்டுள்ள உணர்வுகள் நன்கு அறியப்பட்டவை. ஆன்மீகம் ஒரு வலிமையான கருவி என்றால், ஆன்மீகம் நன்கு வேரூன்றியுள்ள நாடுகளில் போராட்டங்கள் முதலில் வெடிப்பது ஏன்?**

ஸ்ரீஸ்ரீ: ஒரு நாட்டில் ஆன்மீகக் கொள்கை நன்கு வேரூன்றியிருக்கலாம். ஆனால் பெரும்பான்மையான மக்கள் ஆன்மீகத்தில் ஈடுபடாத போது, முரண்பாடுகள்நிச்சயம் தோன்றும் போராட்டங்கள் தலைதூக்குவதை ஆன்மீகத்தால் தடுக்க முடியாமல் போகலாம். ஆனால் போராட்டங்களை ஆன்மீகத்தால் நிச்சயம் தீர்த்து வைக்க முடியும்.

**கேள்வி: நோர்வே மாநாடு எப்படி இருந்தது? அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று உங்களுக்கு ஏன் தோன்றியது? அந்த மாநாட்டின் விளைவுகள் என்ன?**

ஸ்ரீஸ்ரீ: மாநாடு மிகச் சிறப்பாக நடை பெற்றது. அதில் அக்கறை கொண்ட பெரும்பாலோர் பங்கேற்றனர். பலரின் எதிர்ப்பையும் தோல்வி பங்கேற்றனர். பலரின் எதிர்ப்பையும் தோல்வி மனப்பான்மையையும் தாண்டி மாநாடு சிறப்பாக நடைபெற்றது. சூடான விவாதங்கள் இருந்தன. குற்றச்சாட்டுகள் எதிரொலித் தன. எனினும் ஒருவரும் அவையிலிருந்து வெளிநடப்புசெய்யவில்லை. இத்தகையசமயங்களில் வெளிநடப்புகள் சகஜம் தானே! அமைதியை நாடும் உறுதி யான கடமையுணர்வு ஒருவரையொருவர் புரிந்து கொள்ளும் சீர்மிகு ஆற்றலும் முன்பு இல்லாத அளவு மிக ஆழமாக இந்த மாநாட்டில் காணப்பட்டன.

எனவே, நம்மால் செயலாற்றாமல் இருக்கவே முடியாது. உரியவர் என்னும் உணர்வுடன் எவரும் இப்படி நடப்பது தானே இயல்பு:

**கேள்வி: இந்தியா, நோர்வே மற்றும் பல நாடுகளில் ஸ்ரீலங்காவில் அமைதியைக் கொண்டுவர முடியாமல் தோல்வியடைந்த நிலையில் உங்களைப் போன்ற ஆன்மீகத் தலைவரால் வெற்றிபெற இயலுமா?**

ஸ்ரீஸ்ரீ: பெரும் வல்லரசுகள் உலகில் இருக்கலாம். ஆனால் அவைகளால் மக்களின் மனங்களையும் இதயங்களையும் இணைக்க முடியாது. வெல்ல முடியாது. மகாத்மாகாந்தி ஒரு பழுத்த ஆன்மீகவாதி. அதனால் தான் அவரால் சுதந்திரப் போராட்ட இயக்கத்தை திறம்பட நடத்த முடிந்தது. அரசியல் சார்புள்ள அல்லது அரசியல் சார்பில்லா, ஆன்மீகச் சார்புள்ள அல்லது ஆன்மீகச் சார்பில்லாத என்று நமக்கு நாமே முத்திரை குத்திக் கொள்ளக் கூடாது. இந்தப் பூமி கிரகத்தின் மீதும் அதில்வாழும் மக்கள் மீதும் அன்பு செலுத்துபவர் யாராக இருந்தா லும் நிச்சயம் சச்சரவுகளைத் தீர்ப்பதற்குத்தான் பணியாற்றுவார். சுற்றுச் சூழலைப் பராமரித்துப் பாதுகாப்பதற்குத் தான் பணியாற்றுவார். இதைச் செய்வதற்கு விசேஷமான தகுதியோ பட்டமோ தேவையில்லை.

**வாழும் கலை அமைப்பின் ஸ்தாபகத் தலைவர்**
**பூஜ்ய ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் சுவாமிகள்**

**கேள்வி: ஸ்ரீலங்கா அரசு மற்றும் விடுதலைப் புலிகளின் நம்பிக்கையை நீங்கள் பெற்றுள்ளீர்களா? இப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வருவதில் பெரும் பங்காற்றுவதற்கு நீங்கள் விரும்புகிறீர்களா?**

ஸ்ரீஸ்ரீ: ஆம், அமைதியின் மீதுள்ள நாட்டத்தை தவிர வேறு எந்த உள்நோக்கமும் எங்களுக்கு இல்லை என்பதை அவர்கள் உணர்ந்திருக்கிறார்கள் என்று எண்ணுகின்றேன்.

**கேள்வி : "ஆம்" என்றால், நீங்கள் என்ன செய்ய விரும்புகிறீர்கள்? அதை எப்படி செயற்படுத்துவீர்கள்? ஸ்ரீலங்கா அரசும் விடுதலைப் புலிகள் அமைப்பும் உங்களைக் கேட்டுக் கொண்டால் அதை ஏற்றுக்கொள்வீர்களா?**

ஸ்ரீஸ்ரீ: வீடு தீப்பற்றி எரியும்போது அதை அணைக்க வீட்டுக்காரரின் அழைப்பை எதிர் பார்த்துக் கொண்டிருப்பீர்களா? உணர்ச்சி யுள்ள எவரும் உடனே செயலாற்றுவார்கள் அல்லவா! உலகம் முழுவதும் ஒரே குடும்பம் எனக் கருதும். "வசுதேவ குடும்பகம்" என்னும் உணர்வுடன் நம் இரத்த நாளங்களில் உள்ளது.

**கேள்வி: நீங்கள் 2006இல் கிளிநொச்சிக்கு விஜயம் செய்துள்ளீர்கள். மீண்டும் விடுதலைப் புலிகளின் பகுதிக்குச் செல்லத் திட்டமிட்டுள்ளீர்களா?**

ஸ்ரீஸ்ரீ: அமைதியை மீட்பதற்கு மக்களின் துயர் துடைப்பதற்கும் எனது விஜயம் பயன் படும் என்றால் உலகத்தின் ஓரத்திற்கே செல்லக் கூட நான் தயங்கமாட்டேன்.

**கேள்வி: நக்ஸலியத்தைப் பற்றி ஒரு பட்டறையை நோர்வே நாட்டில் நீங்கள் நடத்துவதற்குக் காரணம் என்ன? இதுவரை இந்தப் பிரச்சின்ன பெரும்பாலும் இந்தியா விற்குள் மட்டும் தானே இருந்தது.**

ஸ்ரீஸ்ரீ: நக்ஸலியம் என்பது ஒரு தனிப்பட்ட நாட்டின் பிரச்சினை மட்டும் அல்ல. அனைத்து நாடுகளிலும் அதன் எதிர்வு அதிர்பு இருக்கும். எனவே அதைப்பற்றிய ஒருவிழிப்புணர்வு எல்லோருக்கும் இருக்கவேண்டும் என்று நான் எண்ணினேன்.

**கேள்வி: சற்றுத் திரும்பிப் பார்ப்போம். அமைதி நாட்டம் என்னும் செய்தியைப் பரப்புவதில் வாழும் கலை நிறுவனம் எவ்வளவு வெற்றி பெற்றுள்ளது? அமைதியை மீட்பதில் வாழும் கலை நிறுவனம் எங்கேயாவது வெற்றி பெற்றுள்ளதா?**

ஸ்ரீஸ்ரீ: ஆம், பல இடங்களில்... இரண்டு இன மரபுகளுக்கிடையே நிலவிய சச்சரவைத் தீர்த்ததில் வாழும் கலை நிறுவனத்தை ஐவரி கோஸ்ட் அரசு அங்கீகரித்துள்ளது. இந்நிறுவனத்தின் அமைதிக்கான முயற்சிகளை எதியோப்பியா புகழ்ந்து பாராட்டியுள்ளது. வாழும் கலை நிகழ்ச்சிகளால் ஆயிரக்கணக்கான காஷ்மீர் இளைஞர்களின் வாழ்வில் அமைதியும் ஆறுதலும் மலர்ந்தன. அவர்களுடைய வாழ்க்கையில் நிகழ்ந்த மாற்றமே இதற்கு சான்று. பீகார் மற்றும் சட்டீஸ்கரில் நிகழ்ந்ததும் இதுவே. இத்தகைய இனிய விளைவுகளை உருவாக்க இன்னும் பல தன்னார்வத் தொண்டர்கள் எங்களுக்கு வேண்டும்.

**கேள்வி:நீங்கள் எப்போது இந்தியாவிற்குத் திரும்புவீர்கள்? தற்சமயம் எத்தனை நாடுகளுக்கு நீங்கள் விஜயம் செய்ய உள்ளீர்கள்?**

ஸ்ரீஸ்ரீ: ஜெர்மனிக்கு பிறகு நேரம் மற்றும் பிரஸ்ஸல்ஸ். இப்போது ஒஸ்லோ வந்துள்ளேன். இனி பின்லாந்து, சிங்கப்பூர், இந்தோனேஷியா, தாய்வான் மற்றும் ஹொங்கொங் ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்தபின்னர் இம்மாத நடுப்பகுதியில் இந்தியா திரும்புவேன்.

நன்றி : ஐ.ஏ.எஸ்.

# காளான் = மாற்று கறி + மலிவு வழி

காளான் கறி சமைக்க முடியும் என்பது நிறையப் பேருக்கு தெரிந்த ஒன்று என்றாலும் யாழ்ப்பாணத்தில் காளானை சாப்பிட்டவர்கள் எத்தனை பேர்? நீங்கள் எப்படி?

பண்டைய கிரேக்கருக்கும் ரோமரும் காளானை "கடவுளின் உணவு" என்று அழைத்தார்கள். அத்துடன் விசேட வைபவங்களின் போது மட்டுமே பரிமாறினர்.

எகிப்து தேசத்தில் இது பாரோ (Pharaohs) எனும் மன்னர்களின் உணவாக இருந்தது.

எவ்வாறாயினும் அக் காலத்தில் காளான் அதன் சுவைக்காக மட்டுமே உண்ணப்பட்டது. தற்போது அதன் போசணைப் பெறுமதி அறியப்பட்டுள்ளது.

இப்பொழுது காளான் வர்த்தக ரீதியாக பயிரிடப்படுவதுடன் உலகம் முழுவதும் பல தொன் காளான் உற்பத்தி செய்யப்பட்டு உணவுக்காக பயன்படுத்தப்படுகிறது.

### காளான் என்றால் என்ன?

சில வகைப் பூஞ்சணங்கள் தமது இலிங்க முறை இனப்பெருக்கத்தின் போது கனியுடலம் (Fruiting body) எனப்படும் கட்டமைப்பை உருவாக்குகின்றன. இதுவே காளான் (mushroom) எனப்படும்.


### பூஞ்சணங்கள் பற்றி...

- தாவர பரிணாம வளர்ச்சியில் முதலில் தோன்றி விருத்தியடையாத தாவரம் பூஞ்சணம் (Fungi) ஆகும்.
- தமக்கான உணவை தாமே தயாரிக்க முடியாதவை.
- சில பூஞ்சணங்கள் ஒட்டுண்ணிகளாக வாழ்ந்து தாவரங்களிலும் விலங்குகளிலும் நோயை ஏற்படுத்துகின்றன.
- சில இறந்த தாவரங்களில் வளர்கின்றன. இவை அழுகல் வளரிகள் எனப்படும்.
- அழுகல் வளரிப் பூஞ்சணங்களே காளானை உருவாக்குகின்றன.
- பூஞ்சணங்களின் இயல்புக்கேற்ப விஞ்ஞான ரீதியாக அவை கூட்டங்களாக வகைப் படுத்தப்பட்டுள்ளன.

### உண்ணக்கூடிய காளான்கள்

பல்வேறு பூஞ்சணங்கள் காளானை தோற்றுவித்தாலும் அவை எல்லாவற்றையும் உண்ணமுடியாது. உண்ணக்கூடிய காளான்கள் 'பசிடியோமைசிடிஸ்' (Basidiomycetes) வகுப்பைச் சேர்ந்தவை.

இவ்வகுப்பைச் சேர்ந்த பூஞ்சணங்கள் இலிங்கமுறை இனப்பெருக்கத்தின்போது "சிற்றடிவித்தி"(Basidiospore) எனப்படும்




அமைப்பை உருவாக்குகின்றன.

காளான் மலர்ந்த பின்னர் வெள்ளை நிற தூளாக இவற்றை அவதானிக்கலாம்.

'பசிடியோமைசிடிஸ்'வகுப்பில் 'அகாரிகாலேஸ்' (Agaricales) வர்ணத்தைச் சேர்ந்த பல்வேறு காளான் இனங்கள் உலகம் முழுவதிலும் பொதுவாக பயிரிடப்பட்டு உணவுக்காக பயன்படுத்தப்படுகின்றன. அவையாவன,

1. வைக்கோல் காளான் (Volvariella volvacea)
2. சிப்பிக்காளான் அல்லது ஒயிஸ்ரர் (Oyster) காளான் (Pleurotus spp)
3. மொட்டுக்காளான்(Agaricus bisporus)
4. சிடாகே (Shiitake) காளான் (Lentinus edodes)

இவற்றில் வைக்கோல் காளானே எமது பிரதேசத்தில் பயிரிட சிறந்த இனமாகும்.

### காளான் பயிரிடுவதன் முக்கியத்துவம்

1. மிக மலிவான மாற்று கறி
2. சிறிதளவு இடத்தில் வளர் க்க முடியும்
3. மரத்தூள், வைக்கோல் போன்ற இலகுவாக கிடைக்கும் பொருட்களில் வளர்கலாம்.
4. சிறிதளவு முதலீடு போது மானது.
5. குறைந்த காலம்
6. சிறுவர்களும் பெண்க ளும் ஈடுபட மிகச் சிறந்த தொழில்.

### உணவுக்கு பொருத்தமற்ற காளான்கள்

சிலவகையான காளான்கள் மனிதனால் உண்ணப்படும் பொழுது பாதகமான விளைவுகளை ஏற்படுத்துகின்றன.

இவ்வகை காளான்கள் "மைக்கோரொக்சின்" (Mycotoxin) எனும் நச்சுப் பொருளை கொண்டவை.

இவற்றை உண்ணும் போது காளான் நஞ்சாதல் (mushroom poisoing) ஏற்படுகிறது.

பெரும்பாலும் இதன் அறி குறிகள் உள்ளெடுக்கப் பட்டு 8-24 மணி நேரத்தின் பின்னரே தெரியவரும்.

பின்வரும் காளான் இனங்கள் அதிக நஞ்சுத்தன்மை கொண்டவை.

1. சாவின் தொப்பி -Death cap - Amanita phalloides
2. அழிக்கும் வளைவுகள் (destroying angles-Amanita virosa)
3. முட்டாளின் தொப்பி-(Fools' cap-Amanita verna)

**ந-திலீபன்**
விவசாய உயிரியல்,
சிறப்பு மாணவன்,
விவசாயபீடம்.

இவை பொதுவாக கடும் மணம் அல்லது நிறத்தை கொண்டிருப்பதுடன் புச்சிகளை கவர்வதில்லை.

நஞ்சுக்காளானை கண்டறிய ஒரு தனியான சோதனை முறை இல்லை.

எனினும் பின்வரும் முறைகளை பயன்படுத்தலாம்.

1. வெங்காயத்துடன் அவிக்கும் போது அல்லது பிசையும் போது ஊதா நிறம் தோன்றுதல்

2. காளான் துண்டுகளை வெள்ளிக் கரண்டியுடன் தொடுகையில் வைக்கும் போது கறுப்பு நிறமாக கரண்டி மாறுதல்.

மேலும் நினைவில் கொள்ள வேண்டிய விடயம் என்னவெனில் உண்ணக் கூடிய காளான்களும் சில வேளைகளில் சிக்கல்களை ஏற்படுத்தலாம்.

- சிலருக்கு ஒவ்வாமை ஏற்படலாம்.
- தவறாக சமைத்த அல்லது அதிகளவில் காளானை உண்ணும் போது சமிபாடின்மை ஏற்படலாம்.
- மதுபானங்களுடன் உண்ணும் போதும் சில சிக்கல்கள் ஏற்படலாம்.

மேற்கூறிய காளான் வகைகளுள் சிப்பிக் காளான் யாழ். குடாநாட்டிற்கு மிகவும் பொருத்தமானது. மொட்டுக்காளானும் வளர்க்க முடியும்.

**போசணைச் சத்துக்கள்**

100கிராம் அறுவடை செய்யப்பட்ட புதிய காளானில் அடங்கியுள்ளவை

நீர் – 91.0கிராம்
சக்தி –13கிலோ கலோரி
புரதம் – 2.5கிராம்
கொழுப்பு –0.3கிராம்
கல்சியம் – 20.0 மில்லிகிராம்
இரும்பு – 1.0மில்லிகிராம்
தயமின் – 120.0 மைக்ரோகிராம்
ரைபோ பிளேவின் – 500.0 மைக்ரோ கிராம்
நயாசின் – 5.8 மில்லிகிராம்
விற்றமின் சி – 3.0 மில்லி கிராம்

(மூலம்: விவசாய திணைக்களம்)

# முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா, முறைமையால் ஸ்ரீநகர் விமான நிலையத்தில் தடுத்துவைப்பு

(கொழும்பு)

ஸ்ரீநகரில் கடந்த 24ஆம் திகதி நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில், பங் கேற்பதற்காக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா, ஸ்ரீநகருக்கு விமானத்தில் வந்தார். ஆனால் அவரிடம் சிறப்பு விசா மற்றும் உள்துறை அமைச் சகத் தின் முன் அனுமதிக் கடிதம் இல்லாத தால், ஸ்ரீநகர் விமான நிலையத் தைவிட்டு வெளி யேற அதிகாரிகள் அனுமதி மறுத்து விட்டனர்.

தான் இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி என்றும் இந்திய அரசின் அழைப்பின் பேரிலேயே ஸ்ரீநகர் வந்துள்ளதாகவும் சந்திரிகா எவ்வ ளவோ எடுத்துக்கூறியும், விமான நிலைய அதிகாரிகள் அதைக் காதில் வாங்கவில்லை.

இறுதியாக, கொழும்பில் உள்ள சில அதிகாரிகளிடம் சந்திரிகா பேசி னார். அவர்கள் டில்லியில் உள்ள இலங்கைத் தூதரகத்தைத் தொடர்பு கொண்டு விவரம் தெரிவித்தனர். இந்திய உள்துறை அமைச்சகத்திடம் உரிய அனுமதிபெற்று சந்திரிகாவை விமான நிலையத்தை விட்டு வெளி யேறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டனர். இதையடுத்து, சந்திரிகாவை அனுமதிக்கும் படி உள்துறை அமைச்சகம் உத்தரவிட் டது. நடந்த தவறுக்கு மன்னிப்பு கேட்ட அதிகாரிகள், சந்திரிகா விமான நிலையத்தை விட்டு வெளியேறி ஸ்ரீ நகருக்குள் செல்ல அனுமதித்தனர்.

"ஒரு சுற்றுலா பயணியாக இந் தியா வருவதற்கு மட்டுமே சந் திரிகா அனுமதி பெற்றிருந்தார். அப்படிவரும் போது அவர் அரசியல் ரீதி யான அல் லது பல்கலைக்கழக ரீதியான நிகழ்ச் சிகளில் கலந்து கொள்ள முடியாது. பல்கலை நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வந்திருப்பதாக அவர் தெரிவித்த பின் னர்தான் நாங்கள் உஷாரானோம். அதனால் அவரை விமான நிலையத் திற் காத்திருக்க வைத்தோம்'' என் றும் அதிகாரிகள் கூறினர்.

ஸ்ரீநகரில் உள்ள தெற்கு ஆசிய பவுண்டேஷன் சார்பில், சார்க் கலாசார நிகழ்ச்சி ஒன்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த நிகழ்ச் சியில் பங்கேற்கவே சந்திரிகா வந் தார். சந்திரிகாவைப் போல, ஆப் கான் பெண் விவகார அமைச்சர் கஜன் பரும் நிகழ்ச்சியில் கலந்து கொண் டார் என்பது குறிப்பிடத்தக்கது.

பாகிஸ்தான் முன்னாள் அமைச் சர் அன்சார் பர்னே, புதுடில்லி வந்த போது, சார்க் ஸ்டிக்கர் விசா மூலம் வந்தார். அதேபோல்தான் சந் திரி காவும் வந்திருந்தார். சார்க் ஸ்டிக்கர் விசா கொண்டிருப்பவர் களுக்கு தனி விதிமுறைகள் மற்றும் வழிகாட் டிக் குறிப்புகள் பின்பற்றப் படுவ தால், ஸ்ரீநகர் விமான நிலை யத்தில் சந்திரிகாவைப் பாதுகாப்பு அதிகாரி கள் நிறுத்தி வைத்தனர் என்று கூறப் படுகிறது.

தேசிய ஜனநாயகக் கூட்டணி யின் ஆட்சிக் காலத்தில்தான், இந்த விதிமுறைகள் வெளியிடப்பட்டன. இதன்படி, வெளிநாட்டைச் சேர்ந்த ஒருவர் இந்தியாவிற் கருத்தரங்கு மாநாடு, பல்கலை நிகழ்ச்சிகள் போன்றவற்றில் கலந்துகொள்வ தாக இருந்தால், அவர் மத்திய உள் துறை அமைச்சகத்தின் முன் அனு மதி பெற்றிருக்க வேண்டும். அத் துடன் மனிதவள மேம்பாட்டு அமைச் சகத்தின் ஒப்புதலைப் பெற்றிருக்க வேண்டும். அப்போதுதான் அவர் கள் பங்கேற்க அனுமதிக்கப் படும். அப்படி அனுமதி பெறாததால் சந் திரிகாவுக்குச் சிக்கல் ஏற்பட்டது. விமான நிலையத்தில், அதிகாரிகள் அவரைக் காத்திருக்க வைத்தனர் என்றும் கூறப்படுகிறது. (அ-5)

# பொது மக்கள் மீதான தாக்குதல்கள் தொடருமானால் விளைவுகள் பாரதூரமானதாக இருக்கும்

## கூட்டமைப்பு எம்.பி.கிஷோர்

(கொழும்பு)

வடக்கில் பொதுமக்கள் மீதான தாக்குதல்கள் உடனடியாக தடுத்து நிறுத்தப்பட வேண்டும் இல்லை யேல் விளைவுகள் பாரதூரமாக இருக்கும் என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர் தெரிவித்தார். பாராளு மன்றத் தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற அவசரகால சட்ட பிரேரணை நீடிப்பு மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய கிஷோர் எம்.பி. இவ் வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் கூறியதாவது, வடக்கில் இடம் பெறும் தாக்குதலுக்கு மாற்றீடாகவே தெற்கில் தாக்குதல் நடைபெறுவதாக நான் கருதுகிறேன். வன்னி மீது நாளுக்கு ஐந்து வீதம் இரண்டரை வருடங்களாக அரசாங்கம் விமானத் தாக்குதலை நடத்தி வருகிறது.

அரசாங்கம் கூறுவதைப் போன்று விமானத்தாக்குதல்களில் புலிகளின் முகாம் அழிக்கப்பட்டிருக்குமாயின் எண்ணிக்கைப்படி வன்னியில் உள்ள சகல மக்களும் சிங்களவர்களில் பாதிப் பேரும் கொல்லப்பட்டிருக்க வேண்டும்.

நாய்களைக் கொல்லக் கூடாது என சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. ஆனால், நாள் தோறும் எத்தனை மக்கள் கொல்லப்படுகிறார்கள் ஒவ் வொரு நாளும் வன்னி மீது விமானக் குண்டுத் தாக்குதல் நடைபெறுகிறது. விடுத லைப்புலிகள் மீது தாக் குதல் ந டத்துவதாக கூறி கடந்த இரண் டரை வருட காலமாக எத்தனை முகாம் களை தாக்கியழித்துள்ளனர். கொழும் பிலும் தெற்கிலும் பொது மக்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்களை நாம் கண்டிக்கிறோம். அதே போல, வன்னி யில் பொதுமக்கள் கொல்லப்படுவதை யும் நீங்கள் ஏற்றுக் கொள்ள வேண் டும். யுத்தத்தில ஈடுபடும் இருதரப்பு பொது மக்கள் மீது தாக்குதல் நடத் துவதை நிறுத்த வேண்டும். இராணு வத் தள பதி யுத்தத்தை செய்வதற்கு காலக்கெடு கொடுத்து தனது பதவியை நீடித்துக் கொள்கிறார்.

கடந்த புதன்கிழமை யாழ்ப் பாணம் எழுது மட்டுவாழ் பகுதியில் உள்ள இராணுவ முகாம் தாக்குதலுக்குள் ளாகியுள்ளது. ஆனால் , அந்தச் செய்தி இருட்டிக்கப்பட்டுள்ளது

கிழக்கில் உதயம் என்பது உறுதி என்றுமார் தட்டினீர்கள் என்ன நடந்தது. காவி உடை அணிந்து கொண்டு பாராளு மன்றத்திற்கு வந்ததே கேவலமானது. காவியுடை அணிந்து பாராளு மன் றம் வந்து இனத்து வேசத்தை வளர்த்து வருகின்றனர். நெடுங்கேணி பிரதே சத்திலுள்ள பொது மக்கள் மீது தாக்கு தல் நடத்துவதை உடனடியாக தடுத்து நிறுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன். இல்லையேல் , இந்தத் தாக்குதல்கள் தொடருமானால் அதற்கான விளைவு கள் பாரதூரமானதாக இருக்கும் என் றார். (அ-5)

# அரசும் புலிகளும் பேச்சுவார்த்தைக்கு முன்வரவேண்டும் அனைத்து மதங்களின் அமைப்பின் தலைவர் கோரிக்கை

(கொழும்பு)

அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளும் யுத்தத்தை நிறுத்திப் பேச்சு வார்த்தைக்கு முன்வர வேண்டும் என அனைத்து மதங்களின் முக்கியஸ்தர் களின் அமைப்புத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாகத் தமிழீழ விடு தலைப்புலிகளின் தலைவர் வேலுப் பிள்ளை பிரபாகரன் மற்றும் ஜனாதி பதி மஹிந்த ராஜபக்ஷ ஆகியோ ருக்கு கோரிக்கை அடங்கிய கடிதம் ஒன்றை கடந்த 2ஆம் திகதி அனுப்பி வைத்துள்ளதாக அமைப்பின் தலை வர் செபஸ்டியன் மாரியா அந்தனி தெரிவித்துள்ளார்.

அத்துடன் இலங்கை அரசாங் கம் மனித உரிமை மீறல்களைக் கட் டுப்படுத்துவதற்காக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் அமைப்பின் கண் காணிப்பகத்தை இலங்கை யில் அமைக்க இடம் தரவேண்டும் என் றும் அவர் கோரியுள்ளார்.

இலங்கையில் தற்போது கடத் தல்கள், கொலைகள் எனப் பல் வேறு மனித உரிமை மீறல்கள் இடம் பெற்று வருவதாக அவர் சுட்டிக்காட் டியுள்ளார். கிழக்கில் துணை ஆயு தக்குழுக்களின் ஆயுதங்கள் களை யப்பட வேண்டும்.

அதேநேரம் இடம் பெயர்ந்தோ ருக்கான மனிதாபிமானத் தொண் டர்களுக்கு விதிக்கப்பட் டுள்ள போக் குவரத்துத் தடைகள் நீக்கப்பட வேண் டும். எனக் கேட்டுள்ள அவர் மடு மாதா ஆலயத்தின் சுற்றுப்பகுதி போர்சூனி யப்பிரதேசமாக மாற்றப்பட வேண் டும் எனக் கோரியுள்ளார். (அ-5)


Hatton National Bank

A quoted public company incorporated in Sri Lanka in March 1970, with limited liability

## அடகுப் பொருட்களை ஏலவிற்பனைக்கான அறிவித்தல்

ஹற்றன் நஷனல் வங்கி யாழ்ப்பாணம், சுன்னாகம், நெல்லியடி, ஸ்ரான்லி வீதி, மானிப்பாய் ஆகிய கிளைகளில் 31/03/2007 இற்கு முன்னர் அடகு வைத்து இதுவரை மீட்கப் படாத, கலாவதித் திக தியை நீடிக்க ஆவன செய்யாத வாடிக்கையாளரின் அடகு நகை கள் 14/06/2008 சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு இல.212, 214 ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள யாழ்.கிளையில் ஏலத்தில் விடப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

உங்களின் பெறுமதிமிக்க பொருட்களை உடனே மீட்க முடியாவிட்டால்...

* கடனுக்குரிய வட்டியையும் கடனின் ஒரு பகுதியையும் (ரூபா.500) செலுத்தி

அல்லது

* தற்போதைய சந்தைப் பெறுமதிக்கும் அதிகரித்த கடன் தொகைக்கும் ஏற்ப உங்கள் அடகுப் பொருட்களை மீள அடகு வைத்து காலாவதித் திகதியை நீடித்துக்கொள்ளலாம்.

ஏல விற்பனைத்திகதியினை பிற்போடும் மற்றும் ஏலத்தினை இரத்துச்செய்யும் உரிமைகள் வங்கிக்கு உண்டு.

ஹற்றன் நஷனல் வங்கி (C/1190)


## மணிபல்லவத்தில் மஹோற்சவம்



## நயினை நாகபூஷணி அம்மன் பாமாலை

## நான்காம் திருவிழா

### நயினைத் தாயே நலந்தருவாயே

அஞ்சலென வருமடியார் அல்லல் தீர்க்கும்
அற்புதத்தைக் கேட்டு வானவரும் வந்து
தஞ்சமெனத் திருவடியி லமர்ந்து சிரம்
தாழ்த்தி வணங்கிடச் சிவமைகள் நீங்குகின்ற
விஞ்சுபெரு செயலதனைப் பதியுளோர் கண்டு
விருப்பாக வெந்நாளும் வியந்து நிற்கும்
அஞ்சுதலை நாகமதில் குடிகொண்ட நாகம்மையே
ஆதரவில்லை மாந்தர்க் கருள்வாய் தாயே!

*கலாபூஷணம் மு.தணிகாசலம்*
*கற்கோவளம்.*

### ஞானப்பாலை ஊட்டிடம்மா

நயினையில் அமர்ந்த நாகபூஷணியே
பேயினை விரட்டுவது போல்
நோயினை பகையை விரட்டி
சேயினை கருணையால் காத்திடும்
தாயினைப் போல் ஓடி வந்து
வாயினில் ஞானப்பாலை ஊட்டிட்ம்மா

*க.தெய்வேந்திரன்*
*எழுதுமட்டுவாழ்.*

### அமைதி வாழ்வு தருவாய்

நயினையிலே கோவில் கொண்ட நாகபூஷணி
நாடிவரும் அடியவர்களுக்கு சோகநிவாரணி
நாற்புறமும் கடல் சூழ்ந்த நயினாதீவில்
நாகபாம்பு மீதமர்ந்த நாகநாயகி
தர்மமது பாரினிலே தழைத்தே ஓங்க
தாயே நீ அதர்மமதை களைவாய் இங்கே
அடியார்கள் குறைகள் எல்லாம் பஞ்சாய்ப்பறக்க
பசுமை நிறை அமைதிவாழ்வு தருவாய் தாயே.

*இ.இராகுலன்.*
*புத்தூர்*

### அலையாடும் கடலோரம் அருளாகும் பெருமகளே!

அலையாடும் கடலோரம் அருளாகும் பெருமகளே
கலையாடும் நயினையிலே கவின்கோயில் கொண்டவளே
நிலையான நலம்வாழ நிதம் அருள் தர மேருமா
மலைவாழும் மாதேவி நாகபூஷணியே நீயாடி
வரவேணும்

*தி.மயூரகிரி சர்மா*
*நீர்வேலி*

### அருள்மழை பொழியும்

இலங்கேஸ்வரன் சுமந்த சமாதிலிங்கத்தை
பூஜித் தருள்பாலிக்கின்ற நாகர் குலத்தாயே!
நிலங்கள் நான்கினிலும் நின்னருள்
பரவி விரிந்து ஆயிரமாயிரம் இடங்களில்
தலங் கொண்டு அடியவர்க்கு அருள்மழை
பொழியு மன்னையே யுன் தொன்மை
இலங்கும் வரலாற்றுச் சிறப்பு பலகொண்ட
நயினை நாகபூஷணி தாயே நல்லருள்
விளங்கும் வகையில் அற்புதங்கள்
ஆற்றும் உன்னடி பணிந்தேன் அம்மா!

*இராம ஜெயபாலன்*
*யாழ்ப்பாணம்.*




நயினை நாகபூஷணி தாயின் அருளால் பாரெல்லாம் சாந்தியும் சமாதானமும் மலர வணங்குகின்றோம்.

திருமுருகன் கொம் நெந்

259 கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி
(நல்லூர் ப.நோ.கூ.சங்கம் முன்பாக)

ஒரு மனிதன் கோபமடையும் போது அவன் மனதுக்குள்ளே புயல் எழும்புகிறது. மனச்சாட்சியை அது அழித்து விடுகிறது.

-ராஜாஜி

வலம்புரி

## நாட்டில் யுத்தத்தை நிறுத்தி சமாதானத்தை ஏற்படுத்த வேண்டும்

நாடு பலவழிகளிலும் மோசமான – ஆபத்தான கட்டத்தை நோக்கிச் செல்கின்றது. எங்கும் அவலக்குரல்; எந்நேரமும் மனிதப் பேரவலம் இடம்பெறலாமென்னும் பயங்கரம்; இந்த மோசமான சூழ்நிலை இலங்கை முழுவதற்கும் ஏற்பட்டு விட்டது.

அதிலும் பொதுமக்களின் பாதுகாப்பு என்பது அறவே இல்லாது போய்விட்டது. களவு, கொலை, கொள்ளை என்ற துயரச் செய்திகளை கேட்டுக் கேட்டு மனம் நெக்குருகி விட்டது.

ஓ! இறைவா உன் கருணையை காட்ட ஏன் தான் பின்னிற்கின்றாய் என்ற ஏக்கமும் ஏந்தலுமே பொதுமக்களின் வேண்டுதலாக உள்ளது.

பொதுமக்கள் எத்துணை ஆபத்துக்களை அனுபவித்தாலும் யுத்தத்தை முன்னெடுக்கப் போகின்றோம் என்பது பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவின் சபதமாக உள்ளது.

இந்த நாட்டின் பொறுப்பான பதவியிலும், மூத்த அரசியல்வாதியாகவும் இருக்கக் கூடிய பிரதமர் ஏன்தான் இவ்வாறு நடந்து கொள்கிறார் என்பது புரியாத புதிராக உள்ளது.

தனிப்பட்ட ரட்ணசிறி விக்கிரமநாயக்கவுக்கு யுத்தத்தில் அலாதிப்பிரியம் இருக்கலாம். ஆனால் அவர் இப்போது பிரதமர். எனவே அந்த உயர்பதவியில் இருப்பவர் இலங்கை நாட்டின் பிரதமர் என்பதை முதலில் ஏற்றுக் கொள்ளவேண்டும்.

எனினும் பல சந்தர்ப்பங்களில் அவர் பெரும்பான்மையின மக்களின் பிரதமராகவே தன்னை அடையாளப்படுத்தியுள்ளார். இது அவருக்கும் அவர் அலங்கரிக்கும் பதவிக்கும் அழகல்ல.

ஆட்சியில் இருப்பவர்கள் நாட்டில் அமைதியை-சமாதானத்தை ஏற்படுத்த முன்வர வேண்டும் அதுவே அவர்களின் கடமையும், மக்கள் பணியும் ஆகும்.

இதைவிடுத்து யுத்தத்தை நடத்தி நாட்டை பயங்கரவாதத்திடமிருந்து மீட்போம் என்ற சவால்கள் எல்லாம் அழிவையே தரக்கூடியவை.

இலங்கையின் நீண்ட கால யுத்தத்தில் நாம் கற்றுக்கொள்ளக் கூடிய அனுபவம் யுத்தத்தால் எதனையுமே சாதிக்க முடியாதென்பதாகும்.

யுத்தத்தின் மூலம் வெற்றிகாண முடியுமென யாரேனும்கூறுவார்களாயின் அவர்கள் எத்தனை வருடத்தில் அந்த யுத்தம் வெற்றியைப் பெற்றுத் தரும் என்பதையும் கூறிக்கொள்ளவேண்டும். அவ்வாறு அவர்கள் காலத்தை வரையறுப்பார்களாயின் கடந்த முப்பது வருட யுத்தத்தில் ஏன்தான் எவரும் வெல்ல முடியவில்லை என்ற கேள்வியை முன்வைக்க முடியும்.

எனவே உலகின் யுத்த வரலாற்றையும் இலங்கையின் இனப்போரையும் சீர்தூக்கி ஆராய்கின்ற போது யுத்தத்தால் எந்த நாடுகளும் ஆக்கத்தை கண்டதாக வரலாறு இல்லை.

ஆகவே சமாதானம் ஒன்றுதான் மனித சமூகத்தை வாழவைக்கும். அங்குதான் அமைதியும், ஆனந்தமும் நிலைக்கும். யுத்தத்தின் முடிவு வேதனைகளும் மனித அழிவுகளும் சித்தப் பிரமைகளுமாகவே இருக்கும் என்பது உணரப்பட வேண்டும்.

இப்போது நாட்டில் பொதுமக்கள் பலியாகிப் போகும் சந்தர்ப்பங்கள் தாராளமாக உள்ளன. இதுவே இந்த நாட்டில் மிக மோசமான சூழமைவாகும்.

எனவே பொதுமக்கள் எந்த இனமாயினும், எந்த மொழியாயினும், எந்த சமயமாயினும் அவர்கள் பாதுகாக்கப்பட வேண்டியவர்கள். அவர்களை பாதுகாப்பதற்கு தற்சமயம் இருக்கக் கூடிய வழி ஆயுதம் ஏந்தியவர்களை குவிப்பதல்ல. மாறாக சம்பந்தப்பட்டவர்கள் பேச்சு நடத்தி யுத்தத்தை நிறுத்துவதே ஒரே வழியாகும்.

# அமைச்சர் ஜெயராஜின் படுகொலையில் பாரிய சந்தேகம்!

## விசாரணையில் இருந்த பெண் சயனைட் உட்கொண்டது எவ்வாறு

### சபையில் ஜே.வி.பி.எம்.பி.விஜிதஹேரத் கேள்வி

(கொழும்பு)

அமைச்சர்களை வெளிப்படையாக விமர்சித்ததோடு, ஜே.வி.பி.க்கு ஆதர



வாகவும் பேசிய முன்னாள் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேயின் படுகொலை தொடர்பில் பாரிய சந்தேகம் ஏற்பட்டுள்ளது. இது தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு இரகசிய பொலிஸாரின் விசாரணையில் இருந்த பெண் எவ்வாறு சயனைட் உட்கொள்ள முடியும் என ஜே.வி.பி.பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் கேள்வி எழுப்பினார்.

ஜெயராஜின் படுகொலை தொடர்பில் முழுமையான சரியான விசாரணை உடனடியாக நடத்தப்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். பாராளுமன்றத்தில் அவசரகால சட்ட நீடிப்பு பிரேரணையில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே விஜிதஹேரத் எம்.பி. இவ்வாறு கூறினார். மேலும் அவர் கூறுகையில்,

பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தத்தை மேற்கொள்வதற்காகவே மாதந்தோறும் அவசரகால சட்ட நீடிப்பிற்கு நாம் ஆதரவு வழங்கி வருகின்றோம்.

ஆனால் அந்த அவசரகாலச் சட்டத்தை தனது வங்குரோத்து நிலையை மூடி மறைப்பதற்கே இன்று அரசாங்கம் பயன்படுத்துகின்றது. உலகில் பொருளா தாரம் வீழ்ச்சியடைந்து மக்கள் வறுமைக்குள் தள்ளப்படும் நிலையில் விஞ்ஞானிகள் பல்வேறு ஆராய்ச்சிக்களை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையில் இந்த பொருளாதார வீழ்ச்சிக்கு முகங்கொடுக்கும் வகையிலான நடவடிக்கைகளை அர சாங்கம் மேற்கொண்டுள்ளதா? யுத்தத்துக்கான செலவைவிட வீண்விரயம் செய்யப்படும் தொகையே அதிகமாக உள்ளது. இந்த செலவு அப்பாவி மக்களின் தலையில் சுமத்தப்படுகின்றது.

அமைச்சர்களின் ஊழல்கள், வீண் விரயங்கள் என்பவற்றை மூடி மறைக்க அரசாங்கம் வரிகளை விதிக்கின்றது. இதனால் பொருட்களின்விலை அதிகரிக்கின் றது. இன்று ஜனநாயகம் கேள்விக் குறி யாகியுள்ளது. கிழக்கு தேர்தல் தொடர்பான உண்மை நிலை வெளிப்படுத்தப் படுவதைத்தடுப்பதற்காக பாராளுமன்றம் ஒரு மாத காலம் காரணமின்றி மூடப்பட்டது.

17 ஆவது அரசியலைப்பு திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவதற்கு எதிர்க் கட்சிகள் ஆதரவு வழங்குகின்ற போதும் அரசாங்கம் இதுவரை அதனை நிறைவேற்ற முயற்சிக்கவில்லை. கிழக்கு மாகாணசபை தேர்தல் வெற்றியின் மூலம் அரசிற்கு விரைவில் கசப்பான அனுபவம் ஏற்படும்.

இனங்களிடையே பகைமையை ஏற்படுத்தி அரசாங்கமே பிரிவினை வாதத்துக்கு தூபமிடுகிறது. எனவே அரசாங்கத்துக்கு எதிராகவே நடவடிக்கை எடுக்க வேண்டும். இவற்றை வெளிப்படுத்தும் ஊடகவியலாளர்கள் அச்சுறுத்தப்படுகிறார்கள். கடத்தி கொலை செய்யப்படுகின்றனர். தாக்கப்படுகின்றனர்.

அமைச்சர்களின் அடாவடித்தனங்களை ஆதரிப்பதற்கு நாம் அவசரகாலச் சட்டத்தை ஆதரிக்கவில்லை. மஹிந்தானந்த அலுத்கமகே போன்ற அமைச்சர்களின் கோஷத்துக்கு நாம் அஞ்சவில்லை.

மோசடியில் ஈடுபட்டதாக குற்றஞ்சாட்டப்பட்ட நபர்களுக்கு அரச நிறுவனங்களின் தலைமைப்பொறுப்பு வழங்கப்படுகின்றது. அமைச்சர்களின் தவறுகளை சுட்டிக்காட்டிபாராளுமன்றத்திற்கு உள்ளேயும், அமைச்சரவையிலும் குர லெழுப்பிய அமைச்சர் படுகொலை செய்யப்பட்டார்.

அப்படுகொலை தொடர்பாக கைது செய்யப்பட்டபெண்சயனைட்உட்கொண்டு மரணமானதாக பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பாக முழுமையான விசாரணையை உடனடியாக நடத்த வேண்டும். ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேயின் படுகொலை தொடர்பில் உடனடியாக முழுமையான விசாரணை நடத்த வேண்டும். சரியான முறையில் விசாரணை நடத்த வேண்டும்.

கைதுசெய்யப்பட்டு இரகசிய பொலிஸார் வசம் இருந்த பெண் எவ்வாறு சயனைட் உட்கொள்ள முடியும். முப்படை வீரர்களின் வீரத்தை அரசாங்கம் காட்டிக்கொடுத்துவிட்டது. அமெரிக்கா இலங்கையைவிட அதிகமான மனித உரிமை மீறல்களில்ஈடுபட்டுள்ளது.

அப்படியாயின் அமெரிக்காவுக்கு எதிராக என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டது? வெளிவிவகார, மனித உரிமை அமைச்சர்களின் செயற் றிறநின்மை காரணமாகவே, இலங்கை ஐ.நா.மனித உரிமை கவுன்சி லில் உறுப் புரிமையை இழந்தது.

அரசாங்கம் ஹிட்லர், முசோலினியின் காலத்துக்கு செல்வதற்கு முன்படுகிறது. (அ-5)

## அரச திணைக்களம், கூட்டுத்தாபனங்களில்

# நிவாரண அடிப்படையில் கடமையாற்றும் ஊழியர்களை நிரந்தரமாக்க தீர்மானம்

(கொழும்பு)

அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், நியதிச்சபைகள் என்பவற்றில் தற்காலிக, அமைய நிவாரண அடிப்படையில் கடமையாற்றும் ஊழியர்களை நிரந்தரமாக்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் திஸாநாயக்க சுற்றறிக்கை மூலம் அறிவித்துள்ளார்.

மேற்படி ஊழியர்களை நிரந்தரமாக்குவது தொடர்பாக ஏற்கனவே அமைச்சினால் 21/2006 ஆம் இலக்க சுற்று நிருபமொன்று வெளியிடப்பட்டிருந்தது.

இதில் திருத்தம் ஒன்றைக் கொண்டு வருவதன் மூலம் 2007 ஆம்ஆண்டு ஜூன் மாதம் 30ஆம் திகதி வரை 180 நாட்கள் தொடர்சியாக கடமையாற்றியோரை 2007 ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதலாம் திகதி தொடக்கம் நிரந்தர சேவையில் சேர்த்துக் கொள்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

ஏற்கனவே 2006 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 31ஆம் திகதி வரை 180 நாட்கள் கடமையாற்றியோரை 2006 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதலாம் திகதி தொடக்கம் நிரந்தர சேவையில் சேர்த்துக் கொள்வதற்கு எடுக்கப்பட்ட தீர் மானமே இவ்வாறு மாற்றப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் மேலும் அறி வித்துள்ளார். அரசாங்கத்தின் இப் புதிய தீர்மானத்தின் மூலம்ஆயிரக்கணக் கான தற்காலிக ஊழியர்கள் நிரந்தரமாக்கப் படுவர் என அறிவிக்கப்படுகிறது. (அ-5)

## பிரித்தானிய விசா விண்ணப்பங்கள் 9ஆம் திகதி முதல் சென்னைக்கு!

பிரித்தானிய உயர்ஸ்தானிகரகம் இலங்கையர்களின் சில விசா விண்ணப்பங்களைச் சென்னையில் உள்ள உதவி உயர்ஸ்தானிகரக அலுவலகத்திற்கு மாற்றுவதற்குத் தீர்மானித்துள்ளது.

இது எதிர்வரும் 9ஆம் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரவுள்ளது. இந்தநிலையில் எதிர்வரும் 9ஆம் திகதி முதல் விசாவைப் பெற விண்ணப்பிக்கும் இலங்கையர்கள் பிரதிகளையும் ஏனைய ஆவணங்களையும் ஆங்கில மொழி பெயர்ப்புடன் சமர்ப்பிக்க வேண்டும் எனக் கோரப்பட்டுள்ளது.

இந்த மாற்றங்களுக்காக விசாக் கட்டணங்களில் மேலதிக கட்டணங்கள் எவையும் அறவிடப்பட மாட்டாது என பிரித்தானிய உயர்ஸ்தானிகரகம் குறிப்பிட்டுள்ளது. (அ-5)

ஓலைச் சுவடிகள் 38

## தெரிந்த கதையும் தெரியாத அர்த்தமும்

நம்பிக்கைகளும் ஆசாரங்களும்

### காலும் முகமும் சுத்தம் செய்த பின்னரே வீட்டிற்குள் நுழைய வேண்டும்

வீடு என்பது நாம் தஞ்சம் புகுமிடம். அதனாலேயே ஆராதனை செய்யுமிடத்தின் புனிதத்தன்மை அறிவுள்ளவர்கள் வீட்டுக்கும் உண்டென்று நம்பியிருந்தனர்.

காலும், முகமும் சுத்தமாகக் கழுவி, காலணிகளை வெளியில் கழற்றிப் போட்ட பின்னரே வீட்டினுள் நுழைய வேண்டும் என்று கூறும்போது பெரியவர்கள் இவ்வளவு கண்டிப்பாக இருக்கின்றனரே என்று இளைஞர்கள் மனதுக்குள் முணுமுணுப்பதுண்டு. ஆனால் இந்த கண்டிப்பான விதியில் வீட்டின் புனிதத்தன்மை மட்டுமல்ல நமது தனிப்பட்ட சுத்தத்தையும் குறிப்பிட்டுள்ளது என இதை ஆராய்ந்து பார்க்கும் போது புரியும்.

பலவகை அசுத்தங்கள் நிறைந்திருக்கும் சூழ்நிலைகளிலிருந்து நாம் வீட்டிற்குள் நுழைகின்றோம். நமது பாதத்தில் அழுக்கும் நோயணுக்களும் எளிதில் படியவும் செய்யும். சுத்தமான தண்ணீரால் காலும் முகமும் கழுவும் போது ஒருவர் தன் உடலிலுள்ள அழுக்குகளை அகற்றி, அவற்றை வீட்டிற்குள் கொண்டு செல்லாமல் துரத்துகின்றார்.

நாகரீகம் அதிகமாக போய்ச்சேராத நம் கிராமங்களில் சில வீடுகளின் முன் வாசலுக்கருகில் கால், முகம் கழுவுவதற்காக ஒரு பாத்திரத்தில் சுத்த நீர் வைத்திருப்பதைக் காணலாம்.

# கிழக்கில் வன்முறையைத் தூண்டுவது அரசைக் குழப்பும் சக்திகளே

## பிள்ளையான், ஹிஸ்புல்லா கூட்டறிக்கை

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாண சபையின் செயற்பாடுகளைக் குழப்புவதற்கு எத்தனிக்கும் சக்திகளே தமிழ்-முஸ்லிம் மக்களிடையே இன வன்முறைகளைத் தூண்டுவதாக அம்மாகாண முதலமைச்சரான பிள்ளையான் எனப்படும் சிவனேசதுரை சந்திரகாந்தன் மற்றும் சுகாதார அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா ஆகியோர் கூட்டாகத் தெரிவித்துள்ளனர்.

மட்டக்களப்பு நகரிலுள்ள முதலமைச்சரின் வீட்டில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கிழக்கிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ள விடுதலைப்புலிகளுக்கு கிழக்கு மாகாணத்தில் குழப்ப நிலையை ஏற்படுத்த வேண்டிய தேவை இருப்பதாகக் குறிப்பிட்ட முதலமைச்சர், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மீதும் இது தொடர்பாகக் குற்றஞ்சுமத்தியுள்ளார்.

இனங்களுக்கிடையே நிரந்தரமான ஐக்கியத்தை மீண்டும் ஏற்படுத்தும் வகையில் இன நல்லிணக்கச் செயலகம் ஒன்றை ஆரம்பிக்கத் தான் உத்தேசித்துள்ளதாகவும் மாகாண சபையில் ஆட்சி மாறினாலும் இச் செயலகம் தொடர்ந்தும் செயல்படக் கூடியதாக அமையும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இங்கு கருத்துத் வெளியிட்ட அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா இன ரீதியான செயற்பாடுகளுக்குத் தமிழ் மக்களோ முஸ்லிம் மக்களோ இடமளிப்பார்களானால் அதனால் அப்பாவி மக்களே பாதிக்கப்படுவார்கள்" என்று கூறினார். (ச-5)

# பிரபா தனி இராச்சியம் கோருவதனால் பேச்சுவார்த்தைக்கு இடமில்லை

## அரசாங்கம் தெரிவிப்பு

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் தனி இராச்சியம் ஒன்றைத் தொடர்ந்தும் கோரி வருவதால் பேச்சுவார்த்தைக்கு இனி இடமில்லை என இலங்கை அரசாங்கம் உதவிவழங்கும்நாடுகளுக்கு அறிவித்துள்ளது.

ஜெனீவாவில் உள்ள இலங்கைக்கான நிரந்தரப் பிரதிநிதியூடாக இலங்கை அரசாங்கம் இந்த அறிவித்தலை விடுத்துள்ளதாக திவயின நாளேடு செய்தி வெளியிட்டுள்ளது. ஒரே நாட்டிற்குள் அதிகாரப் பரவலாக்கலுக்கு அரசாங்கம் தயார் என்ற போதிலும் விடுதலைப்புலிகளின் தலைவர் நாட்டில் மூன்றில் இரண்டு பகுதியைக் கோரி நிற்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனி இராச்சியம் ஒன்றைத் தவிர்ந்த வேறு எந்தவொரு தீர்வுத் திட்டத்திற்கும் இடமில்லை என தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் நோர்வே அரசாங்கத்திற்கு அண்மையில் கடிதம் மூலம் அறிவித்துள்ளார். (ச-5)

# அஞ்சல் அதிபர் நேர்முகத் தேர்வை யாழில் நடாத்த நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

அஞ்சல் அதிபர்களை இணைத்துக் கொள்வதற்கான நேர்முகப் பரீட்சைஸ்ய் யாழ்ப்பாணத்தில் நடாத்துவதற்கு சமூக சேவைகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அஞ்சல் மாஅதிபருக்கு அறிவுறுத்தியுள்ளார் என வட வலயப் பிரதி அஞ்சல் மாஅதிபர் வி. குமரகுரு தெரிவித்தார்.

அஞ்சல் மாஅதிபரினால் அறிவிக்கப்பட்டதன் பிரகாரம் எதிர்வரும் 20 ஆம்திகதி கொழும்பிலுள்ள அஞ்சல் மாஅதிபர் அலுவலகத்தில் நேர்முகத்தேர்வு நடைபெறவிருந்தது.

எனினும் யாழ்.பரீட்சார்த்திகளின் போக்குவரத்துப்பிரச்சினைகளைக் கருத்தில்கொண்டு அந்நேர்முகப் பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடாத்துமாறு தபால் தொலைத்தொடர்பு அமைச்சரூடாக அஞ்சல் மாஅதிபருக்கு சமூக சேவைகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அறிவுறுத்தியுள்ளார் என வட வலய பிரதி அஞ்சல் மாஅதிபர் வி.குமரகுரு மேலும் குறிப்பிட்டார். (ச-5)

## முஸ்லிம் குழுக்களுக்கிடையில் புத்தளத்தில் மோதல்

(புத்தளம்)

புத்தளம் கரிக்கட்டி அகதிமுகாமில் இரு முஸ்லிம் குழுக்களுக்கு இடையில் கடும் மோதல் இடம்பெற்றுள்ளது.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூவ் ஹக்கீமின் ஆதரவாளர்களுக்கும் மீள்குடியேற்ற அமைச்சர் றிசாட் பதியுதீனின் ஆதரவாளர்களுக்குமிடையில் இந்தக் கைகலப்பு இடம்பெற்றுள்ளது.

கரிக்கட்டியில் உள்ள அகதிமுகாம் ஒன்றுக்கு முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூவ் ஹக்கீம் நேற்று விஜயம் செய்யத் திட்டமிட்டிருந்தார்.

எனினும் குறித்த இடத்திற்கு வந்த அமைச்சரின் ஆதரவாளர்களுக்கும் முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர்களுக்கும் இடையில் கடுமையான மோதல் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த சம்பவத்தில் பலர் காயமடைந்துள்ளதாகவும் காயமடைந்தவர்கள் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இரு தரப்பினரதும் வாகனங்களும் இத் தாக்குதலில் சேதமடைந்துள்ளன. (ச-5)

## தமிழ் மாணவர்கள் மீது...

வர்கள் நையப்புடைத்தனர் என்று பாதிக்கப்பட்ட தமிழ் மாணவர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

தாக்குதலுக்கு இலக்கான தமிழ் மாணவர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் தவிர மேலும் 30 தமிழர்கள் மொறட்டுவப் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

அதேநேரம் மொறட்டுவவில் தமிழர்களுக்குச் சொந்தமான கடைகள் மற்றும் வீடுகள் சிலவும் தாக்குதல்களுக்கு இலக்காகியுள்ளன. அதுமட்டுமன்றி வெள்ளவத்தை மற்றும் தெஹிவளையில் வீதியால் சென்ற தமிழ் இளைஞர்கள் தாக்குதலுக்கு இலக்கானதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

இச் சம்பவங்கள் குறித்து அரசியல்வாதிகளிடம் முறையிடப்பட்டுள்ளது. இதேவேளை கண்டியில் நேற்று மாலை இடம்பெற்ற பேருந்து குண்டுவெடிப்புக்குப் பின்னர் கண்டியிலும் தமிழ்மக்களுக்கு எதிரான வன்முறைகள் சிறியளவில் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-5)

## அர்ப்பணிப்...

வெளியிட்டுள்ளார்.

தென்னாசிய நாடான இலங்கையில் கடந்த 20 வருடங்களாக இடம்பெற்று வரும் யுத்தத்தினால் பல இலட்சக் கணக்கான மக்கள் பாரிய துன்பங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

இந் நிலையில் மக்களின் துன் பங்களைச் சர்வதேச சமூகம் கவலையுடன் நோக்குவதாகப் பாப்பரசர் குறிப்பிட்டுள்ளார். இதேவேளை இங்கு கருத்துரைத்த இலங்கையின் தூதுவர், வணக்கத்துக் குரிய பிதா ஜிம்பிறவுண் காணாமல் போன சம்பவம் தொடர்பில் உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதாகக் குறிப்பிட்டார். (ச-5)

## கண்டி பொல்கொல்லப் பகுதி...

கின்றது. பஸ்ஸின் பின்புற இருக்கைக்கு அடியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த குண்டே வெடித்துச் சிதறியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவத்தில் காயமடைந்தவர்கள் சகலரும் ஆண்கள் என்றும் அதில் சிலர் சிறு சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

சம்பவத்தையடுத்து ஸ்தலத்திற்கு விரைந்த ஆயுதம் தரித்த பாதுகாப்புப் படையினர் அப் பிரதேசத்தைச் சுற்றிவளைத்துக் கடும். தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டதாகவும் சம்பவத்தை அடுத்து தப்பியோட முயற்சித்த ஒருவரைப் பொதுமக்கள் மடக்கிப் பிடித்துப் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமாகிய ரஞ்சித் குணசேகர தெரிவித்தார்.

இது தொடர்பில் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தொடர்ந்தும் கூறியதாவது, வத்தேகமவிலிருந்து கண்டி நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த தனியார் பஸ்ஸிலேயே குண்டு வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றது.

இதன்போது இருவர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் இருபது பேர் காயமடைந்துள்ளனர். குறித்த குண்டுவெடிப்புச் சம்பவத்தையடுத்து அப் பகுதியிலிருந்து தப்பிச் செல்ல முற்பட்ட சந்தேக நபர் ஒருவரைப் பொதுமக்கள் பிடித்துள்ளதுடன் அவரைப் பொலிஸாரிடமும் ஒப்படைத்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரைச் சோதனையிட்ட பொலிஸார் அவரிடமிருந்து வயர்கள் சிலவற்றையும் நஞ்சுப் போத்தல் ஒன்றையும் கைப்பற்றியுள்ளனர்.

குறித்த சந்தேக நபர் தற்போது கட்டுகஸ்தோட்டைப் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

சம்பவத்தின் போது உயிரிழந்தவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் அவ்விரு சடலங்களும் தற்போது கண்டி ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன.

நீதிவான் அனுமதியின் பிரகாரம் இரு சடலங்கள் பிரேத பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்படுவதுடன் பின்னர் அவற்றை உறவினர்களிடம் ஒப்படைக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

குண்டு வெடிப்புச் சம்பவத்தையடுத்துக் குறித்த பிரதேசத்தில் படையினரும் பொலிஸாரும் இணைந்து பாரிய சுற்றிவளைப்புத் தேடுதல் ஒன்றை மேற்கொண்டுள்ளனர். (ச-5)

## மொறட்டுவத் தாக்குதலுக்கு...

ஆத்திரமூட்டி தமிழ் மக்களுக்கு எதிரான இன வன்முறை ஒன்றைக் கட்டவிழ்த்து விடுவதே புலிகளின் நோக்கம் என்பதை பொதுமக்கள் மீதான இத் தாக்குதல்கள் உறுதிப்படுத்துகின்றன.

புலிகள் கிழக்கில் முகம் கொடுத்த தோல்வியும் வடக்கில் இராணுவ ரீதியில் சந்தித்து வரும் பின்னடைவுகளையும் திசை திருப்புவதற்கு மேற்கொள்ளும் ஒரு தந்திரோபாயமே இத்தாக்குதலாகும்.

இந்த வன்முறைத் தாக்குதலின் மத்தியில் சுய கட்டுப்பாட்டுடனும் பொறுமையாகவும் நடந்து கொள்ளும்படி நாட்டு மக்களிடம் கேட்டுக் கொள்கின்றேன்.

எமது நாட்டில் பயங்கரவாதத்தைத் தோற்கடிப்பதற்குப் பாதுகாப்புப் படையினர் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளுக்குப் பொது மக்கள் தமது ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்றும் ஜனாதிபதி விடுத்துள்ள கண்டன அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-5)

## பஸ்ஸின் மீது கிளைமோர்த் தாக்குதல்...

கல்கிசையிலிருந்து கொட்டாவ நோக்கிச் சென்று கொண்டிருந்த 255 இலக்க வழிப்பாதையைக் கொண்ட பஸ்ஸினை இலக்கு வைத்து மொறட்டுவப் பல்கலைக் கழகத்திற்கு அண்மையில் உள்ள சைலபிம்பாரமைய விகாரைக்கு முன்பாக இக்கிளைமோர்த் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

முன்னர் பஸ்ஸிற்குள் இருந்த குண்டே வெடித்ததாகப் பொலிஸார் தெரிவித்திருந்தனர். ஆனால் பின்னர் தாக்குதல் இடம்பெற்ற வீதியில் உள்ள மரங்கள் நிறைந்த பகுதியில் மறைத்து வைக்கப்பட்ட இக்கிளைமோர்க் குண்டு தொலைவிலிருந்து இயக்கப்படும் தன்னியக்கக் கருவியைப் பயன்படுத்தி வெடிக்க வைக்கப்பட்டதாக இராணுவப்பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இச் சம்பவத்தில் சம்பவ இடத்திலேயே 19 பேர் கொல்லப்பட்டனர். மேலும் ஒருவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

கொல்லப்பட்டவர்களில் 12 ஆண்களும் 8 பெண்களும் அடங்குவர் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. காயமடைந்தவர்கள் களுபோவில மற்றும் லுணாவ வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டனர். களுபோவிலவில் 48 பேரும் லுணாவ வைத்தியசாலையில் 13 பேரும் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் ஒருவரும் அனுமதிக்கப்பட்டனர்.

பின்னர் லுணாவவில் அனுமதிக்கப்பட்ட 13 பேரும் களுபோவிலவுக்கு மாற்றப்பட்டனர். காயமடைந்தவர்களில் 12 பேர் ஆபத்தான நிலையில் உள்ளனர் என்று களுபோவில வைத்திய சாலை வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

அவர்களுக்கு சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. ஆபத்தான கட்டத்தில் இருக்கும் சிலர் மேலதிக சிகிச்சைகளுக்காகக் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இக் கிளைமோர்த் தாக்குதலையடுத்துக் கல்கிசைக்கும் கொட்டாவவிற்கும் இடைப்பட்ட வீதிப் போக்குவரத்தினைப் படைத் தரப்பினர் மூடினர். இதனால் அப்பகுதியில் பெரும் வாகன நெரிசல் ஏற்பட்டது.

### ஊரடங்கு அமுல்

இச் சம்பவத்தில் காயமடைந்த அனைவரும் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட பின்னர் உடனடியாக பொலிஸ் ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. நேற்றுக் காலை 9 மணிமுதல் மாலை 6 மணி வரை இந்த ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

மொறட்டுவ, கட்டுப்பெத்த, தென்டெனியாவத்த மற்றும் தெஹிவளையின் சில பகுதிகளிலேயே இந்த ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டிருந்தது. ஊரடங்குச் சட்டம் நடை முறைப்படுத்தப்பட்டதையடுத்து அப் பகுதிக்கு மேலதிக படையினரும் பொலிஸாரும் குவிக்கப்பட்டுத் தேடுதல் மேற்கொள்ளப்பட்டது.

இதேவேளை கிளைமோர்த் தாக்குதல் இடம்பெற்ற இடத்தில் நேற்று முன்தினம் இரவு நாய்கள் வழமைக்கு மாறாகக் குரைத்ததாகவும் நேற்றுக் காலை சில நாய்களுக்கு நஞ்சு ஊட்டப்பட்டிருந்தது என்றும் அப்பகுதியில் உள்ளவர்கள் தெரிவிக்கின்றனர்.

நஞ்சூட்டப்பட்டதால் அப்பகுதியில் 7 நாய்கள் உயிரிழந்துள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-5)


3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னையாக 12 06 1928 | தெய்வமாக 11 06 2005



(திதி:- 07.06.2008)

அமரர் கைலாசபிள்ளை விஜயலட்சுமி

அன்னையே எங்கள் ஆருயிர்த் தாயே
அவனியில் எம்மைப் பெற்று வளர்த்த தெய்வமே
திருவெண்காடான் திருவடியில் இருந்து
தினமும் எம்மைக் காக்க வேண்டும் அம்மா.

குளங்கரை லேன்,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
- குடும்பத்தினர்

(C-1192)


இப்பத்திரிகை வலம்புரி அச்.கோ ஸ்தாபனத்தாரால் இல.1 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.06.2008 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.